This is only for Sample
www.Padasalai.Net
www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



சுராவின்

# தமிழ் உரைநூல்



## 12ஆம் வகுப்பு

2019–20 ஆம் ஆண்டுக்கான புதிய பாடத்திட்டத்தின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**சிறப்பம்சங்கள்**

- புதிய பாடத்திட்டத்தின்படி, பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதல் வினா – விடைகள், மொழித்திறன் பயிற்சிகள்(கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி மொழிபெயர்ப்பு, மொழியாக்கம்) ஆகியவை தரப்பட்டுள்ளன.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample
www.Padasalai.Net
www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



2019-20 பதிப்பு
© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-81-8449-976-6**
**குறியீட்டு எண் : SG142**

**எழுதி வழங்கியவர்கள்**

**வ. குமரன்,** M.A., M.Phil,

**க. மதிமாறன்,** M.A., M.Ed, M.Phil, PGDCA

**கமலா**, M.A., B.Ed.,

**தலைமை அலுவலகம்:**

1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,

அண்ணா நகர், சென்னை-600 040.

☎ 91-44-26162173, 26161099

✆96001 75757 / 81242 01000 / 81243 01000,

வாட்ஸ்அப்: 8124201000

**e-mail :** orders@surabooks.com,

**website :** www.surabooks.com

Our Guides for XI, XII Standard

- Sura's Tamil
- Sura's Smart English & Tamil Translation
- Sura's Smart English Practice Workbook
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available 1 Mark Q & A (EM/TM),2,3 Marks (EM/TM) and 5 Marks Q & A (EM / TM) for all Subjects.

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு

புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com

புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com

தொடர்புக்கு : 96001 75757 / 8124301000

வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027

**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com

பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# பதிப்பாசிரியர் உரை

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக.** – **திருவள்ளுவர்**

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிய பாடநூல் 2019 பதிப்பின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின்** பன்னிரெண்டாம் வகுப்பிற்கான **தமிழ் உரைநூல்** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம். தேர்வில் நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம், கூடுதல் வினா விடைகள், மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

***மாணவர்களாகிய நீங்கள் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை புரிய வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் இந்த தமிழ் உரைநூல் உருவாக்கம் பெற்றுள்ளது.***

**இறையருளை வேண்டுகிறோம்!**

**நலமே விளைக! . . .**

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பதிப்பகம்)



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | மொழி **உயிரினும் ஓம்பப் படும்** | செய்யுள் | இளந்தமிழே! | 1-36 |
| | | உரைநடை | தமிழ்மொழியின் நடை அழகியல் - தி.சு நடராசன் | |
| | | செய்யுள் | தண்டியலங்காரம் | |
| | | துணைப்பாடம் | பாரதியின் கடிதம் | |
| | | இலக்கணம் | தமிழாய் எழுதுவோம் | |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல் **பெய்யெனப் பெய்யும் மழை** | உரைநடை | பெருமழைக்காலம் | 37-64 |
| | | செய்யுள் | பிறகொரு நாள் கோடை | |
| | | | நெடுநல்வாடை | |
| | | துணைப்பாடம் | முதல்கல் | |
| | | இலக்கணம் | நால்வகைப் பொருத்தங்கள் | |
| 3. | பண்பாடு **சுற்றத்தார் கண்ணே உள** | உரைநடை | தமிழர் குடும்ப முறை | 65-114 |
| | | செய்யுள் | விருந்தினர் இல்லம் | |
| | | | கம்பராமாயணம் | |
| | | துணைப்பாடம் | உரிமைத்தாகம் | |
| | | இலக்கணம் | பொருள் மயக்கம் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| 4. | கல்வி **செல்வத்துள் எல்லாம் தலை** | உரைநடை | பண்டைய காலத்துப் பள்ளிக்கூடங்கள் | 115-150 |
| | | செய்யுள் | இதில் வெற்றி பெற | |
| | | | இடையீடு | |
| | | | புறநானூறு | |
| | | துணைப்பாடம் | பாதுகாப்பாய் ஒரு பயணம் | |
| | | இலக்கணம் | பா இயற்றப் பழகலாம் | |
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் **நாடென்ப நாட்டின் தலை** | உரைநடை | மதராசப்பட்டினம் | 151-188 |
| | | செய்யுள் | தெய்வமணிமாலை | |
| | | | தேவாரம் | |
| | | | அகநானூறு | |
| | | துணைப்பாடம் | தலைக்குளம் | |
| | | இலக்கணம் | படிமம் | |




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample
www.Padasalai.Net
www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores




| இயல் | பொருண்மை | | பாடத் தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|---|---|
| 6. | கலை, அழகியல், புதுமைகள்<br>**சிறுகை அளாவிய கூழ்** | உரைநடை | திரைமொழி | 189-236 |
| | | செய்யுள் | கவிதைகள் | |
| | | | சிலப்பதிகாரம் | |
| | | | மெய்ப்பாட்டியல் | |
| | | துணைப்பாடம் | நடிகர் திலகம் | |
| | | இலக்கணம் | காப்பிய இலக்கணம் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம்<br>**அருமை உடைய செயல்** | உரைநடை | இலக்கியத்தில் மேலாண்மை | 237-270 |
| | | செய்யுள் | அதிசய மலர் | |
| | | | தேயிலைத் தோட்டப் பாட்டு | |
| | | | புறநானூறு | |
| | | துணைப்பாடம் | சங்ககாலக் கல்வெட்டும் என் நினைவுகளும் | |
| | | இலக்கணம் | தொன்மம் | |
| 8. | மனிதம், ஆளுமை<br>**எல்லா உயிரும் தொழும்** | உரைநடை | நமது அடையாளங்களை மீட்டவர் | 271-308 |
| | | செய்யுள் | முகம் | |
| | | | இரட்சணிய யாத்ரிகம் | |
| | | | சிறுபாணாற்றுப்படை | |
| | | துணைப்பாடம் | கோடை மழை | |
| | | இலக்கணம் | குறியீடு | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| திணை விளக்கம் - அணி இலக்கணம் | | | | 309-313 |
| **மொழித்திறன் பயிற்சிகள்**<br>கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுதல், வல்லின மெய்களை இட்டு எழுதுதல், வல்லின மெய்களை நீக்கி எழுதுதல், எழுத்துப் பிழையைத் திருத்தி எழுதுதல், வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுதல், ஆங்கிலச் சொல்லை நீக்கி தமிழில் எழுதுதல், பிறமொழிச் சொற்களை நீக்கி தமிழில் எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், மயங்கொலி, உவமை, உருவக மாற்றங்கள், தொகைச் சொற்களை விரித்து எழுதுதல், நிறுத்தற்குறிகளை இட்டு எழுதுதல், இரு பொருள் தரும் ஒரு சொல்(அ) இருபொருள் தருதல்(அ) பல பொருள் குறிக்கும் ஒரு சொல், விரிவாக்கம் தருதல், ஏற்ற வினா அமைத்து எழுதுதல், அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி - மொழிபெயர்ப்பு, மொழியாக்கம். | | | | 314-394 |


www.surabooks.com





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'** Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : PADI | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : ASIAD COLONY | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-26162173, 26161099.
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com    Website : www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

இயல் - 1

## தன்னேர் இலாத தமிழ்

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்து(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்! - தண்டி

பா வகை : **நேரிசை வெண்பா**

அணி : **பொருள் வேற்றுமை அணி**

இயல் - 2

## நெடுநல்வாடை

'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்
பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென
ஆர்கலி முனைஇய கொடுங்கோல் கோவலர்
ஏறுடை இனநிரை வேறுபுலம் பரப்பிப்
புலம்பெயர் புலம்பொடு கலங்கி கோடல்
நீடுஇதழ்க் கண்ணி நீர் அலைக் கலாவ
மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க - நக்கீரர்

பாவகை : **நேரிசை ஆசிரியப்பா**

இயல் - 3

## கம்பராமாயணம்

2. 'துன்பு உளதுஎனின் அன்றோ
சுகம் உளது? அது அன்றிப்
பின்பு உளது; இடை மன்னும்
பிரிவு உளது என உன்னேல்;
முன்பு உளெம் ஒரு நால்வேம்
முடிவு உளது என உன்னா
அன்பு உள, இனி, நாம் ஓர்
ஐவர்கள் உளர் ஆனோம்.

பாவகை : **கலிவிருத்தம்**



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





9. குகனோடும் ஐவர் ஆனேம்
முன்பு; பின் குன்று சூழ்வான்
மக னொடும் அறுவர் ஆனேம்;
எம்முழை அன்பின் வந்த
அகன் அமர் காதல் ஐய!
நின்னொடும் எழுவர் ஆனேம்;
புகல் அருங் கானம் தந்து,
புதல்வரால் பொலிந்தான் நுந்தை.

– கம்பர்

பா வகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## திருக்குறள்

### இல்வாழ்க்கை

1. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

3. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

### செய்ந்நன்றி அறிதல்

4. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது.

8. நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

9. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

### வெஃகாமை

12. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## வெகுளாமை

15. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

17. தன்னைத்தான் காக்கின் சினம்காக்க; காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்.

18. சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

## ஊழ்

15. நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றும்தன்
உண்மை அறிவே மிகும்.

– திருவள்ளுவர்

இயல் – 4

## இதில் வெற்றிபெற

விண்வேறு; விண்வெளியில் இயங்கு கின்ற
வெண்மதியும் செங்கதிரும் முகிலும் வேறு;
மண்வேறு; மண்ணோடு கலந்தி ருக்கும்
மணல்வேறு; பனித்துளியும் மழையும் வேறு;
புண்வேறு; வீரர்களின் விழுப்புண் வேறு;
புகழ்வேறு; செல்வாக்கு வேறு; காணும்
கண்வேறு; கல்விக்கண் வேறு; கற்றார்
கவிநடையும் உரைநடையும் வேறு வேறு.

– சுரதா

பாவகை : எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

## புறநானூறு

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே; அதனால்
காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை;
மரங்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே
எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே.

– ஔவையார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா
திணை : பாடாண்





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





இயல் - 5

## தெய்வமணிமாலை

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்.

– இராமலிங்க அடிகள்

**பாவகை :** பன்னிருசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

இயல் - 6

## சிலப்பதிகாரம்

குழல்வழி நின்றது யாழே, யாழ்வழித்
தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப்
பின்வழி நின்றது முழவே, முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை.

– இளங்கோவடிகள்

**பாவகை :** ஆசிரியப்பா

## திருக்குறள்

### அறிவு உடைமை

1. அறிவற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்அழிக்கல் ஆகா அரண்.

3. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

5. எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



### சிற்றினம் சேராமை

7. நல்லினத்தின் ஊங்கும் துணையில்லை; தீயினத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல்.

### வினைத்திட்பம்

8. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

9. சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

11. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

### தூது

12. கடன்அறிந்து காலம் கருதி இடன்அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.

### உட்பகை

15. வாள்போல் பகைவரை அஞ்சற்க; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

### சூது

20. பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.

– திருவள்ளுவர்

**இயல் – 7**

## புறநானூறு

காய்நெல் அறுத்துக் களம் கொளினே;
மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,
வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;

– பிசிராந்தையார்

**பாவகை :** நேரிசை ஆசிரியப்பா





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





இயல் – 8

# இரட்சணிய யாத்திரிகம்

## இறைமகனின் எளியநிலை

2. பாதகர் குழுமிச் சொற்ற பழிப்புரை என்னும் கொள்ளி
ஏதமில் கருணைப் பெம்மான் இருதயத்து ஊன்ற ஊன்ற
வேதனை உழந்து சிந்தை வெந்து புண்பட்டார் அல்லால்
நோதகச் சினந்தோர் மாற்ற நுவன்றிலர் கரும நோக்கி. – எச்.ஏ. கிருட்டிணனார்

பாவகை : அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

# சிறுபாணாற்றுப்படை

## இவர்களோடு நல்லியக்கோடன்

................. என ஆங்கு
எழுசமங் கடந்த எழு உறழ் திணிதோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
விரிகடல் வேலி வியலகம் விளங்க
ஒருதான் தாங்கிய உரனுடை நோன்தாள். – நல்லூர் நத்தத்தனார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

★ ★ ★

www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


இயல் 1

மொழி

# உயிரினும் ஓம்பப் படும்

பாடப் பகுதி

| | |
|---|---|
| கவிதைப் பேழை (செய்யுள்) | இளந்தமிழே! – சிற்பி பாலசுப்பிரமணியம் |
| உரைநடை உலகம் | தமிழ்மொழியின் நடை அழகியல் – தி.சு. நடராசன் |
| கவிதைப் பேழை (செய்யுள்) | தன்னேர் இலாத தமிழ் – தண்டி |
| விரிவானம் (துணைப்பாடம்) | தம்பி நெல்லையப்பருக்கு – பாரதியார் |
| இனிக்கும் இலக்கணம் (இலக்கணம்) | தமிழாய் எழுதுவோம் |



## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

1. **இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்**

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்

இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல் **[விடை: இ) தொல்காப்பியம்]**

2. **"மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு" கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,**

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது

உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி

இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி **[விடை: ஈ) க, ங இரண்டும் சரி]**



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



3. "மின்னோர் தனியாழி வெங்கதிரொன்று ஏனையது
தன்னோர் இலாத தமிழ்!" - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள தொடைநயம்

அ) அடிமோனை, அடிஎதுகை ஆ) சீர்மோனை, சீர்எதுகை

இ) அடிஎதுகை, சீர்மோனை ஈ) சீர்எதுகை, அடிமோனை

[விடை: இ) அடிஎதுகை, சீர்மோனை]

4. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.
கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டு கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

[விடை: இ) இரண்டு கருத்தும் சரி]

5. பொருத்துக.

அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு. நெல்லையப்பர்

ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்

இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்

ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்

அ) 4, 3, 2, 1 ஆ) 1, 4, 2, 3

இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1 [விடை: ஈ) 2, 3, 4, 1]



## குறுவினா

1. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

(i) 'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26) என்றும் 'நடைநவின்றொழுகும்' (செய்.135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.

(ii) மேலும்,

'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை
வெண்பா நடைத்தே கலி' (செய். 107)

என்றும் சொல்லுகிறது; 'கவிதையின் இயங்காற்றல்தான் நடை' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

2. "படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானை கலிமான் பேக" - இச்சங்கக் கவிதையின் அடிகளில் ஓசை நயமிக்க சொற்களையும் அவற்றிற்கான இலக்கணக் குறிப்புகளையும் எடுத்து எழுதுக.

| | |
|---|---|
| (i) படாஅம்<br>(ii) கெடாஅ<br>(iii) கடாஅ | செய்யுளிசை அளபெடை |
| (iv) ஈத்த | பெயரெச்சம் |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

3. **கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?**

(i) சிவந்த சூரியன் மாலை நேரத்தில் மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்.

(ii) வானமெல்லாம் செந்நிறத்துப் பூக்காடாகக் காட்சியளிக்கும்.

(iii) தம் ஒளிக்கதிர்கள் போல உழைக்கும் உழைப்பாளர்கள் கரங்கள் சிவந்து நோகத் தாம் உழைக்கும் உழைப்பாளர்களின் வியர்வை வெள்ளம் விம்முகின்ற தோள்மீதில் முத்துமுத்தாய் வீற்றிருக்கும், அவையெல்லாம் வியந்து பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் கவிஞர் சிற்பி.

4. **விடியல், வனப்பு - இரு சொற்களையும் ஒருங்கிணைத்துத் தொடர் அமைக்க.**

(i) வைகுறு விடியல் காண்பது வனப்பு

(ii) அதிகாலை விடியல், பார்ப்பதற்கு அழகாக இருக்கும். (வனப்பு – அழகு)

(iii) கன்னி விடியல் கவினுறு வனப்பு. கன்னி விடியலை வைத்து கவிஞர் கவிதை எழுதுவர். அக்கவிதை அழகு தரும்.

## சிறுவினா

1. **சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.**

எந்தத் தொன்மையான மொழியும் சமிக்ஞையிலிருந்தும் இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும் இசைக் கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே அந்தப் பனுவலின் – பாடலின்– ஒலிப்பின்னல் என்கிறோம்.

**எடுத்துக்காட்டு :**

(i) 'கடந்தடு தானை மூவிருங்கூடி' என்று தொடங்கும் புறநானூற்றுப் பாடலின் வன்மையான உணர்ச்சியைக் காட்டுகிற விதத்தில் க, த, ட, ற முதலிய வல்லின மெய்கள், பிற மெல்லின, இடையின மெய்களைக் காட்டிலும் அதிகமாக வருவதை அறிந்து கொள்ளலாம்.

(ii) 'படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்' (புறம் –145) என்ற பாடலில் உயிர் ஒலிகள் – குறிப்பாக நெடில் ஒலிகளின் வருகையும், சில ஒலிகளும் சில சொற்களும் திரும்பவரல் தன்மை பெற்றிருப்பதும் இவற்றோடு சேர்ந்து நிகழ்த்தப்பெறும் சொல் விளையாட்டுகளும் இங்கே கவனத்திற்குரியன. இந்த ஒலிக்கோலம் சங்கப் பாடல்களில் முக்கியமான ஒரு பண்பு.

2. **'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.**

"செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான்
செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம்"

(i) சிவந்த சூரியன் மாலை நேரத்தில் மலை மேட்டில் தலையைச் சாய்ப்பான்.

(ii) சிவந்த சூரியன் இயல்பாக மாலை நேரத்தில் மலை மேட்டில் சென்று மறையும். பொன்மாலை நேரத்தில் வானம் சிவந்திருப்பது இயல்பு. இவ்வாறு வானம் சிவந்திருப்பதை செந்நிறத்து பூக்கள் நிறைந்த காடு என்று வர்ணிக்கிறார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

3. **ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

(i) **இடம் :** இத்தொடர் அணி இலக்கணத்தைக் கூறும் தண்டியலங்காரம் என்ற நூலில் பொருளணியில் இடம் பெற்றுள்ளது.





www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(ii) **பொருள் :** மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது.

(iii) **விளக்கம் :** புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி சான்றோரால் தொழப்பட்டு மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன்; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

**4. பின்வரும் இரு பாக்களின் கருத்துகளிலுள்ள வேற்றுமையை எடுத்துக்காட்டுக.**

| | |
|---|---|
| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>– நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பரமணியம் |

**விடை :**

| பழையன கழிதலும் புதியன புகுதலும்<br>வழுவல கால வகையி னானே.<br>– நன்னூல் | மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு<br>மெய்சிலிர்க்கத் தமிழ்க்குயிலே! கூவி வா, வா!<br>– சிற்பி பாலசுப்பரமணியம் |
|---|---|
| கால மாற்றத்தால் நாம் புதிய சொற்களைக் கண்டறிகிறோம். அவற்றிற்கான பொருள்களையும் அவற்றை நம் மொழிக்கும் பண்பாட்டிற்கும் ஏற்றவாறு திருத்திப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை உணர்த்தும் வரிகள்தான் இவை. காலச்சூழலுக்கேற்றபடி புதிய சொற்களை உருவாக்குதல் இலக்கிய வளர்ச்சியாகக் கூறப்படுகிறது. | முத்தமிழைப் பாண்டியர்கள் சங்கம் வைத்து வளர்த்தனர். நம் சிந்தனை அத்தமிழின் பழமையை மறவாமல் பண்பாட்டைப் புதுப்பிக்கும் சிந்தனையாக இருக்க வேண்டும். பழமைகளைப் புதுப்பித்துப் போற்ற வேண்டும் என்று சிற்பி. பாலசுப்பிரமணியம் கூறுகிறார். |



## நெடுவினா

**1. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக.**

**முன்னுரை:**

தமிழர்களின் அழகுணர்வு, மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது. கவிப்பொருளை அமைக்கின்ற விதத்தில், உணர்ச்சியைப் பாய்ச்சும் விதத்தில் இனிய கவிதைகளை செவியாரப் பருகச் செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வு பண்டைக் கவிஞர்களுக்கும் இயல்பாக இருந்தது. கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை இங்கு காண்போம்.

**மொழிசார் கலை:**

அழகியலை உருவாக்குவதற்குத் தளம் அமைத்து தந்தது தொல்காப்பியம் ஆகும். இலக்கியம் என்ற **மொழிசார் கலை** மொழியின் தனித்துவமான பண்புகளை இயன்ற மட்டும் தனக்குரியதாக்கிக் கொள்கிறது. இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத் தன்மையைத் தந்து விடுகிறது. இத்தகைய தன்மைதான் கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று பேசப்படுகிறது. இதனால் மொழிசார்ந்த பொருள், மொழிசார்ந்த கலையாக ஆகிவிடுகிறது.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**நடையியல் கலை :**

பாட்டு அல்லது கவிதையின் நடையியல் கூறுகளில், ஒலிக்கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிக முக்கியமானவை. மொழியின் தனிச்சிறப்பான கூறுகளும், அவற்றைக் கையாளுகின்ற வகைமைகளும் கவிதையின் உந்துசக்தியாக அமைகின்றன. கவிதையின் இயங்காற்றல் தான் நடை.

**ஒலிக்கோலங்கள் :**

மொழி சார்ந்த கவிதையும் இசையோடும், இசைக் கருவியோடும்தான் பிறக்கிறது. ஓசையும் பொருளும் இணைந்து கலை வடிவம் கொள்கின்றன.

**சொற்புலம் :**

சொல்லில்தான் உணர்வும், பொருளும் பொதிந்து கிடக்கின்றன. சொல்வளம் சிறப்பாக இருந்தால் மட்டுமே கவிதை வளம் பெறும்.

**தொடரியல் போக்குகள்:**

ஒலிக்கோலமும், சொற்புலமும் சொற்றொடர் நிலையும் பாடலின் தளத்தை ஏர் நடத்திப் பண்படுத்திப் போகின்றன என்றால் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணிகளைத் தொடரியல் வடிவம் செய்கின்றது.

**முடிவுரை:**

கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளாய் மொழிசார்கலையும், ஒலிக்கோலங்களும், சொற்புலமும், தொடரியல் போக்குகளும் முக்கியப் பங்காற்றுகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

**2. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.**

**முன்னுரை:**

உறவுக்கு எழுதும் கடிதங்கள், அறிவுறுத்தலுக்கு எழுதும் கடிதங்கள், வேண்டுதலுக்கு எழுதும் கடிதங்கள், வணிகத்திற்கு எழுதும் கடிதங்கள் என்று கடிதங்கள் எழுதுகையில் அவற்றின் மொழியாட்சி மாறுபடுகிறது. அந்த வகையில் பாரதியின் கடிதம் வாயிலாக அவரின் மொழிப்பற்று, சமூகப் பற்று பற்றி இங்கு காண்போம்.

**மொழிப்பற்று :**

(i) தமிழ், தமிழ், தமிழ் – என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்ள வேண்டும்.

(ii) புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் – தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும்.

(iii) உள்ளமே உலகம்! ஏறு! ஏறு! ஏறு! மேலே! மேலே! மேலே! மேலே!

(iv) உனக்குச் சிறகுகள் தோன்றுக! பறந்து போ!

(v) பற! பற! – மேலே! மேலே! மேலே!

**சமூகப்பற்று :**

(i) நம்நாடு தமிழ்நாடு! தமிழ்நாடு வாழ்க என்று நீ எழுது!

(ii) நம் நாட்டில் நோய்நொடிகள் இல்லாமல் அனைவரும் நலமாக வாழ நீ எழுது! நோய் இல்லாத நாடாக தமிழ்நாடு மாற வேண்டும். சுற்றுச்சூழல் மாசில்லா நாடாக மாற வேண்டும் என நீ எழுது.

(iii) தமிழ்நாட்டில் தெருக்கள் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் திறக்க வேண்டும்; அந்தப் பள்ளிக்கூடங்களிலே நவீன கலைகள் எல்லாம் பயிற்சி பெற்று வளர்க என்று நீ எழுது.

(iv) ஆணும் பெண்ணும் சமம் என்று நீ எழுது. ஆணும் பெண்ணும் ஓர் உயிரின் இரண்டு தலைகள் என்று நீ எழுது. ஈருடல் ஓர் உயிர் என்று நீ எழுது.



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(v) இந்நிலையில் ஆணுக்கு நிகர் பெண் என்றும், இதில் உயர்வு தாழ்வு என்று எதுவும் இல்லை, பெண் அடிமை என்று வீட்டில் பூட்டி வைத்தவன் தன் கண்களை தானே அடைத்துக் கொண்டான் என்று நீ எழுது.

(vi) தொழில்கள் வளர, வியாபாரம் பெருக, முயற்சிகள் ஓங்க செய்யும் தொழில்களில் வெற்றி காண வேண்டும் என்று நீ எழுதுக.

(vii) இயந்திர நூல்கள் பல்கிப் பெருக வேண்டும். இதன் மூலம் தொழில்நுட்பங்கள் தொழில்களில் பயன்படுத்த வேண்டும். சுழலும் பூமி மாசு இல்லாமல் சுற்றுப்புறத் தூய்மைகளை மக்கள் நன்கு உணரும் வகையில் நீ எழுது.

(viii) கோள்கள் பற்றி மக்கள் நன்கு உணர வழி செய்ய வேண்டும். அதனை தம் தாய்மொழியில் கூறிட வேண்டும். சங்கீதம், சிற்பம், யந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கை நூல் என்று ஆயிரம் கிளைகள் தமிழ்நாட்டில் மலிந்திட வேண்டும் என்று நீ முழங்கு.

**முடிவுரை:**

பாரதியின் கனவு நனவாகும் வகையில் ஒவ்வொரு குடிமகனும் மொழிப்பற்றும், சமூகப் பற்றும் கொண்ட நல் உணர்வினை மேம்படுத்த சுயநலத்தைக் கைவிடுக. பொதுநலச் சிந்தனை வளர அரும்பாடு படுக. அப்பொழுதுதான் நம் நாடு மொழியாலும் சமூக உயர்வாலும் உயர்ந்து நிற்கும்.

**3. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

நம் பாடப் பகுதியில் இடம் பெற்ற கவிதை சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'நிலவுப் பூ' என்னும் கவிதைத் தொகுப்பில் தமிழின் சீரிளமைத் திறம் வியந்து வருணித்ததை இங்கு காண்போம்.

**இளந்தமிழே :**

சிவப்பு சூரியன் மாலையில் மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான். அந்நேரம் வானமெல்லாம் செந்நிறப் பூக்களாக காட்சியளிக்கும். வானம் சிவந்து காணப்படும். அதனைப் போல கொடுத்து கொடுத்து சிவந்தக் கரங்கள் எந்தக் கரங்களோ! வள்ளல்கள் புகழ் பாடும் நல்லுலகம்! கரங்கள் சிவந்து போகும் அளவிற்கு வாரி வழங்கும் வள்ளல்கள் நம் நாட்டில் பலருண்டு.

உழைக்கும் தொழிலாளர்கள் சிந்துகின்ற வியர்வைத் துளிகள் ஒன்று சேர்த்து வெள்ளமாக உருவெடுக்கும். வியர்வைத் துளிகள் தோள்மீது முத்து முத்தாய் வீற்றிருக்கும் உழைக்கும் வர்க்கத்தினரை வியந்து பாடுவதற்குச் செந்தமிழே! உன்னை விட ஏற்ற துணை வேறு உண்டோ? சொல்! தமிழே சொல்! என்கிறார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

முன்பு ஒரு காலத்தில் மூவேந்தர்களில் தலைசிறந்த மன்னர்களாம் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய்! முச்சங்கத்தில் கடைச் சங்கமாம் மதுரையில் நின் புகழைப் பாடிய புலவர்கள் பலநூறு! இவர்களை ஆதரித்த பாண்டிய மன்னர்கள் பல பேர். இதனை நல்லுலக வரலாறு எடுத்துக்கூறும்.

முதல், இடை, கடை என வள்ளல்கள் தோன்றிய நாடு நம்நாடு. பாரி முதல் வள்ளல்களை ஈன்ற தமிழ்த்தாய். பழமையையும், புதுமையையும் பிணைக்கும் கண்ணுக்குத் தெரியாத நூல்தான் மொழி. மீண்டும் அந்தப் பழமை நலம் புதுக்குதற்கு மெய்சிலிர்க்கத் தமிழ்க் குயிலே! கூ கூ வென கூவி வா! வா!

கூண்டிலே அடைப்பட்ட சிங்கம் உடைத்தெழுந்ததைப் போல்! குளிர்பொதிகைத் தென்தமிழே! சிங்கம் போல் சீறி வா! வா! என முழங்குகிறார் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம்.

**முடிவுரை:**

உழைக்கும் தொழிலாளர்களை இரு கரம் கொண்டு வாரி வழங்கும் வள்ளல்கள் இன்றும் அவர்களை கடையெழு வள்ளல்களைப் போல ஆதரவு தருகின்றனர். தமிழின் சீரிளமைத் திறம் வியந்து போற்றுகின்றார் கவிஞர்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**4. 'சொல்லோவியங்கள்(கவிதை)' என்னும் நூல் உங்கள் பள்ளி ஆசிரியரால் எழுதப்பட்டு உங்கள் பள்ளியில் வெளியிடப்படுகிறது. அவ்வெளியீட்டு விழாவிற்கான நிகழ்ச்சி நிரலை உருவாக்கி, நன்றியுரை ஒன்றை எழுதுக.**




# சொல்லோவியங்கள் (கவிதை)

## நூல் வெளியீட்டு விழா

**நாள் :** 14-06-2019 வெள்ளிக்கிழமை **நேரம் :** மாலை 6.50 மணி

**இடம் :** கபிலன் நவீன இலக்கிய அகம்,
மெட்ரிக் மேனிலைப் பள்ளி சென்னை - 42

| | | |
|---|---|---|
| **நிகழ்ச்சி நடத்துநர்** | : | கவிஞர் சி.கபிலன் |
| **மங்கல விளக்கேற்றல்** | : | திருமதி, செந்தமிழ்ச்செல்வி |
| **வரவேற்புரை** | : | நாட்டியக் கலாநிதி. புவனா தமிழரசன் |
| **நிகழ்வரங்கு** | : | புத்தக ஆய்வும் அறிமுகமும்<br>கவிஞர். முத்தரசன் அவர்கள்<br>கவிஞர் அறிவழகன் அவர்கள் |
| **ஏற்புரை** | : | கவிஞர் சு. கபிலன் அவர்கள் |
| **அறிமுக உரையும் வெளியீட்டு உரையும்** | : | திரு.மு.சௌந்தர பாண்டியன் அவர்கள் (புத்தக வெளியீடு) |
| **சிறப்புரை** | : | கவிஞர் தென்றல் தென்னவன் |
| **நன்றியுரை** | : | திருமதி. இராசாத்தி தென்றல் தென்னவன் |

அனைவரும் வருக! (இரவு 8.30க்கு நிறைவு பெறும்)

**நன்றியுரை:**

அனைவருக்கும் காலை வணக்கம். இத்தருணம் நன்றி தெரிவிக்கும் தருணம். இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு வருகை தந்து சிறப்புரையாற்றி எங்கள் செவிகளுக்கு விருந்தளித்த சிறப்பு விருந்தினர் அவர்களுக்கு நன்றி கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழா சிறப்பாக நடைபெற எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எங்கள் பள்ளி தலைமையாசிரியர் மற்றும் ஆசிரிய பெருமக்களுக்கு நன்றி கூறுவதில் ஆனந்தமடைகிறேன். பெற்றோர்களுக்கும், என் சகோதர சகோதரிகளுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை நவில்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அலுவலக பணியாளர்களுக்கும் ஒலி, ஒளி அமைத்துக் கொடுத்தவர்களுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்

வழக்கு ஒன்றில் சாட்சி அளிக்க நீதிமன்றத்திற்குத் தமது மாணவர்களுடன் வந்திருந்தார் தமிழறிஞர் ஒருவர். அக்கால ஆங்கிலேய நீதிபதிகளுக்கு மொழிபெயர்த்துச் சொல்ல அதிகாரிகள் இருப்பார்கள். தமிழறிஞர், சாட்சியத்தை ஆங்கிலத்திலேயே சொல்ல ஆரம்பிக்க, குறுகிய மனம் கொண்ட நீதிபதி அதை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பாமல் தமிழில் கூறச் சொல்லி உத்தரவிட்டார். அவர் உடனே 'அஞ்ஞான்று எல்லி எழ நானாழிப் போதின்வாய் ஆழிவரம் பனைத்தே காலேற்றுக் காலோட்டப் புக்குழி' என்று துவங்கினார். மொழிபெயர்ப்பாளர்




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

திணறிப் போனார். கோபமுற்ற நீதிபதி ஆங்கிலத்தில் பேசக் கூறி உத்தரவிட அவர் மறுத்துத் தமிழிலேயே கூறினார். அவரது மாணவர் மற்றவர்களுக்குப் புரியும்படி விளக்கினார். 'சூரியன் தோன்றுவதற்கு நான்கு நாழிகை முன்னர்க் கடற்கரை ஓரம் காற்று வாங்கச் சிறுநடைக்குப் புறப்பட்ட போது' என்பது அவர் கூறியதற்குப் பொருள். இத்தகைய மொழித்திறன் கைவரப்பெற்றவர்தான் ஆறுமுக நாவலர்.


ஆறுமுக நாவலர் (1822-1879)

"வசனநடை கைவந்த வல்லாளர்" எனப் புகழப்படும் ஆறுமுக நாவலர் யாழ்ப்பாணம் நல்லூரில் பிறந்தவர். தமிழ், வடமொழி, ஆங்கிலம் எனும் மும்மொழிப் புலமை பெற்றவர். தமிழ்நூல் பதிப்பு, உரைநடை ஆக்கம், பாடசாலை நிறுவுதல், அச்சுக்கூடம் நிறுவுதல், கண்டன நூல்கள் படைத்தல், சைவ சமயச் சொற்பொழிவு எனப் பன்முக ஆளுமை பெற்றவர்.

திருக்குறள் பரிமேலழகர் உரை, சூடாமணி நிகண்டு, நன்னூல் – சங்கர நமச்சிவாயர் விருத்தியுரை என்று பல நூல்களைப் பதிப்பித்தார். இலக்கண நூல்கள், பூமி சாஸ்திரம் முதலான பாட நூல்கள் அவரால் ஆக்கப்பட்டன. புராண நூல்களை வசனமாக எழுதி அதனை அனைவரும் படிக்கும் எளிய வடிவாக மாற்றினார். தமது இல்லத்தில் அச்சுக்கூடம் நிறுவிப் பல நூல்களை அச்சிட்டார். திருவாவடுதுறை ஆதினம் இவருக்கு 'நாவலர்' பட்டம் வழங்கியது. பெர்சிவல் பாதிரியார் விவிலியத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவும் இவர் உதவினார்.

## தமிழாக்கம் தருக

1. **Learning is a treasure that will follow its owner everywhere.**

   **விடை:** கற்றல் எல்லா இடங்களிலும் அதன் உரிமையாளரைப் பின்பற்றும் ஒரு கருவூலமாகும்.

2. **A new language is a new life.**

   **விடை:** ஒரு புதுமொழி ஒரு புது வாழ்வாகும்.

3. **If you want people to understand you, speak their language.**

   **விடை:** மக்கள் உங்களைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், அவர்களது மொழியை பேசுங்கள்.

4. **Knowledge of languages is the doorway to wisdom.**

   **விடை:** மொழிகளின் அறிவு ஞானத்திற்கான நுழைவாயிலாகும்.

5. **The limits of my language are the limits of my world.**

   **விடை:** என் மொழியின் வரம்புகளே என் உலகின் வரம்புகளாகும்.

## இலக்கிய நயம் பாராட்டுக

முச்சங்கங் கூட்டி
    முதுபுலவர் தமைக் கூட்டி
அச்சங்கத் துள்ளே
    அளப்பரிய பொருள்கூட்டி
சொற்சங்க மாகச்
    சுவைமிகுந்த கவிகூட்டி
அற்புதங் செல்லாம்
    அமைத்த பெருமாட்டி!

– கண்ணதாசன்

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


**திரண்ட கருத்து :**

தமிழ்த்தாய், முதல், இடை, கடைச் சங்கங்களை அமைத்து அறிவில் முதிர்ந்த புலவர்களைக் கொண்டு அச்சங்கத்தின் மூலம் அளப்பதற்கரிதான பொருள் சேர்த்து சொற்களின் சங்கமான, மிகுந்த சுவையுடைய கவிதைகளை இயற்றி அற்புதங்கள் நிகழச் செய்த பெருமாட்டியாவாள்.

**மையக் கருத்து :**

தமிழ்த்தாய் முச்சங்கங்கள் மூலம் பல அற்புதங்களை நிகழ்த்தியுள்ளாள்.

**மோனைத் தொடை** : முச்சங்க – முதுபுலவர்
அச்சங்க – அளப்பரிய
சொற்சங்க – சுவைமிகுந்த
அற்புதங்கள் – அமைத்த

**எதுகைத் தொடை** : முச்சங்க – அச்சங்க
சொற்சங்க – அற்புதங்கள்

**இயைபுத் தொடை** : கூட்டி

**அணிநயம்** : சங்கப் புலவர்களால் தமிழ் வளர்ந்ததைக் கவிஞர் இயல்பாகக் கூறியுள்ளதால் இயல்பு நவிற்சி அணி ஆகும்.

## கீழ்க்காணும் பத்தியைப் படித்து ஐந்து வினாக்களை உருவாக்குக

மொழி என்பது மக்கள் படைத்துக் காக்கும் அரியதொரு கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாகவும் உள்ளது. பெற்ற தாயின் முதல் வேட்கை தன் குழந்தையுடன் பேசுதல். அவள் முதலில் அடையும் பெரிய மகிழ்ச்சி. குழந்தையின் பேச்சைக் கேட்பதே ஆகும். குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது மொழி வளர்ச்சியே ஆகும். மனம் என்பது பெரும்பாலும் மொழியால் வளர்ந்து அமைந்தது. மனத்தின் வளர்ச்சிக்கு ஏற்பவே பேசுவோரின் மொழியும் வளர்ச்சி பெற்று நிற்கும். மக்கள் அனைவரும் மொழிக்கு ஆசிரியராகவும் உள்ளனர்; மாணவராகவும் உள்ளனர். மொழியை வளர்ப்பவரும் மக்களே; மொழியால் வளர்பவரும் மக்களே.

**வினாக்கள் :**

1. மக்கள் படைத்துக் காக்கும் அரிய கலை எது?
2. பெற்றதாயின் முதல் வேட்கை யாது?
3. குழந்தையின் மனவளர்ச்சியோடு தொடர்புடையது எது?
4. மக்களுக்கும் மொழிக்கும் உள்ள உறவுகள் யாவை?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு எழுதுக.

## உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக

தாமரை இலை நீர்போல, கிணற்றுத்தவளைபோல, எலியும்பூனையும்போல, அச்சாணி இல்லாத தேர்போல, உள்ளங்கை நெல்லிக்கனிபோல

1. **தாமரை இலை நீர்போல**

சென்னை நகர மக்கள் **தாமரை இலை நீர்போல** பழகுவார்கள்.

2. **கிணற்றுத்தவளைபோல**

நாம் **கிணற்றுத் தவளை போல்** நாட்டு நடப்புகளை அறியாமல் இருந்தால் இயந்திர வாழ்க்கையில் வெற்றி பெற இயலாது.




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



3. **எலியும் பூனையும்போல**

கந்தனும் முருகனும் **எலியும் பூனையும் போல** எப்போதும் சண்டை போட்டுக் கொண்டே இருப்பார்கள்.

4. **அச்சாணி இல்லாத தேர்போல**

குடும்பத் தலைவர் இல்லாத வீடு **அச்சாணி இல்லாத தேர்போல** செயலற்று இருக்கும்.

5. **உள்ளங்கை நெல்லிக்கனிபோல**

மரங்கள் வளர்த்தால் மழை வரும் என்பது **உள்ளங்கை நெல்லிக்கனி போல** அனைவரும் அறிந்ததே.

## ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக

**தாய்மொழிவழிக் கல்வியின் சிறப்புகள்.**

எண்ணத்தை வெளியிடுவதற்கும், சிந்தனையாற்றல் பெருகுவதற்கும் தாய்மொழியே துணைநிற்கும் – இதனை வலியுறுத்த பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிக் கல்வியின் தேவை – தாய்மொழிச் சிந்தனை – அறிஞர்களின் பார்வை – கற்கும் திறன் – பயன் – இன்றைய நிலை.

**விடை :**

**முன்னுரை :**

கல்வி என்பது நம் அறியாமையைப் போக்கும் கருவி ஆகும். இதன் இன்றியமையாமையை உணர்த்துவதற்கு நம் தமிழ்ச் சான்றோர்கள் ‘இளமையில் கல்’ என்றும் ‘கற்க கசடற’ என்றும் கூறியுள்ளனர். அப்படிப்பட்ட கல்வியை நாம் நம் தாய்மொழியில் கற்பது சிறந்தது என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**தாய்மொழிக் கல்வியின் தேவை :**

தாய்மொழியில் கல்வி கற்பதனால் மாணவர்களால் உண்மையான அறிவைப் பெற முடிகிறது. சிறப்பாகச் சிந்திக்க முடிகிறது. அவர்கள் கற்றதை சமுதாயத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. தாய்மொழியில் கற்பதால் இவர்களுக்குக் கற்கும் திறன் நாளடைவில் வளர்ச்சி பெறுகிறது. இம்முறையால் மாணவர்கள் தன்னம்பிக்கை பெறுகிறார்கள். எளிதில் உரையாடும் ஆற்றலும் சிறந்த பேச்சாற்றலும் வளர்கிறது. தாய்மொழியில் கற்றவர்கள் சிறந்த படைப்பாளராக இயலும். தாய்மொழியை நன்கு அறிந்த மாணவர்களால் பிற மொழியை எளிதாகப் புரிந்து கொள்ள இயலும். பிறமொழியைச் சரளமாகப் பேச இயலும். தாய்மொழியை அறியாமல் பிற மொழியில் புலமை பெற விரும்புவது ‘முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படும்’ கதைதான்.

**தாய்மொழிச் சிந்தனை :**

தாய்மொழிக் கல்வியே சிந்தனைத் திறனை, ஆராய்ச்சிப் புலமையை வளர்க்கும்; பன்மடங்கு விரிவாக்கும், மொழிக்கும் மனதிற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. குழந்தையின் மூளைக்கு மற்ற மொழிகளைவிட தாய்மொழியை உள்வாங்கிக் கொள்ளும் திறன் அதிகம். ஏனென்றால் குழந்தை தாயின் கருவறைக்குள்ளேயே தனது மொழியைத் தெரிந்து கொள்கிறது. தாய்மொழியில் கல்வி கற்பதன் மூலம் குழந்தைகள், கற்பதைத் தாங்கள் பேசுவதுடனும் சமுதாயத்துடனும் ஒப்பிட்டுப் பார்க்க முடிகிறது. அதனால் அவர்கள் ஒரு விஷயத்தை நோக்கும் விதம் வேறுமொழியில் கற்பவர்களைவிட மாறுபடுகிறது. இவை கற்கும் திறனை நாளடைவில் அதிகரிக்கச் செய்கிறது.

**அறிஞர்களின் பார்வை :**

“தாய்மொழியில் அறிவியல் கல்வியைக் கொடுப்பதன் மூலம் ஆக்கப்பூர்வ சிந்தனையைக் குழந்தைகள் மத்தியில் கொண்டு வர முடியுமென்று” முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் கூறியுள்ளார். “ஒருவனது இதயத்தைத் தொடுவதற்கு அவனது தாய்மொழியில் பேசவேண்டும் என்றும் பொதுமொழியில் பேசினால்



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

அவனது எண்ணத்தை மட்டுமே அறிய முடியும் என்றும்" நெல்சன் மண்டேலா தாய்மொழிக் கல்வி பற்றிக் கூறியுள்ளார். யுனெஸ்கோ (UNESCO) அமைப்பு தாய்மொழிக் கல்வி பயிலும் குழந்தைகளே மிகவும் ஆழமாகக் கல்வி கற்கின்றனர் எனக் கூறியுள்ளது. இது அனைத்து வயதினருக்கும் அளிக்கப்படும் கல்விக்கும் பொருந்தும். 'பள்ளிகளில் பயிற்று மொழியாகத் தாய்மொழிதான் இருக்க வேண்டும்' என்பது மகாத்மா காந்தியடிகளின் கருத்து.

**கற்கும் திறன் – பயன் :**

மாணவர்களின் ஆற்றலை வளப்படுத்துகிறது. அவர்களின் படைப்பாற்றலை அதிகப்படுத்துகிறது. தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கிறது. எந்த மொழியைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான். எளிதாகப் பாடங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது. உலகிலிருந்து மாணவர்கள் தனிமைப்படுத்தப்படாமல் இருக்கவும் தாய்மொழி கல்வியே உதவும். இக்கல்வி தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கிறது. தாய்மொழியில் மாணவர்களால் எளிமையாக உரையாட முடியும். அதனால் ஆசிரியர்கள் எளிதில் கலந்துரையாடலில் ஈடுபட முடியும். இதனால் மாணவர்களின் பங்களிப்பு உள்ள ஒரு கல்வி முறை உருவாகிறது.

**இன்றைய நிலை :**

தாய்மொழிக் கல்வி கற்பவர்களால் ஆங்கில மொழியில் கற்பவர்களைப் போல ஆங்கிலத்தில் சரளமாய்ப் பேச முடியாது என்ற கருத்து நம் மக்களிடையே இன்று நிலவி வருகிறது. இது முற்றிலும் தவறான கருத்தாகும். இக்காலத்தில் தாயே தன் குழந்தைக்கு 'Mummy, Daddy' என்று தான் சொல்லிக் கொடுக்கிறாள். இந்தி படித்தால் இந்தியா முழுவதிலும் வேலை வாய்ப்பு. ஆங்கிலம் படித்தால் அயல் நாடுகளில் வேலைவாய்ப்பு என்ற எண்ணத்துடன் சமுதாயம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலை மாற வேண்டும். கல்வியும் மொழியும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்தவை. கல்வியையும் மொழியையும் ஒரு சேர பார்க்க வேண்டும். கல்வி என்ற தாவரம் வளர்வதற்கு மொழி என்ற வேர் பலமாகவும் வளமாகவும் இருக்க வேண்டும்.

**முடிவுரை :**

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு"

என்றார் பாரதிதாசன் அப்புகழுக்கெல்லாம் சொந்தமான தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் தாய்மொழியில் கல்வி பயின்று மொழியைச் சிறப்பிப்போம்.

## மொழியோடு விளையாடு

**எண்ணங்களை எழுத்தாக்குக.**



**விடை:**

ஓர் இனத்தின்
வரலாறு
தமிழன்...
உளி வைத்த
இடங்களெல்லாம்
சிலைகளும் ஓவியங்களும்.
கலைகளை
உடைகளில்லா காலத்திலேயே
உளியால்
செதுக்கியவன்
தமிழன்
கலைகளின் தலைமகன்
தமிழன்டா...

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



| | |
|---|---|
| எண்ணங்களைத் தெரிவிக்க | தலைமுறைக்குத் தெரிவிக்க எண்ணி |
| சைகைகளைக் காட்டினான். | பாறைகளில் குறியீடாக்கினான் |
| குரலைப் பயன்படுத்தினான் | எழுத்து வடிவம் மாறியது |
| சொற்களைக் கற்றுக்கொண்டான் | கல்வெட்டுகள் உருவானது. |

## அந்தாதித் தொடரால் கவித்துவமாக்குக

குழந்தையைக் கொஞ்சும் தாயின் குரல்

தாயின் குரலில் உயிரின் ஒலி.

**விடை :**

உயிரின் ஒலி அது உள்ளத்தின் ஒலி

உள்ளத்தின் ஒலி உண்மை பேசும்

உண்மையைப் பேசி குழந்தையை வளர்க்கும்.

## குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்

எ.கா. கவிஞர்: ஈற்றிரு சொல்லால் அணிகலன் செய்யலாம். – கவிமணி

(தமிழ்ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

1. தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். **[விடை: மறைமலை அடிகள்]**
2. தாய்மொழி; ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். **[விடை: தமிழ்ஒளி]**
3. சிறுகதை ஆசிரியர் ; முதல் பாதி நவீனம். **[விடை: புதுமைப்பித்தன்]**
4. முன்னெழுத்து அரசன்; பின்னெழுத்து தமிழ் மாதம். **[விடை: கோதை]**

## செய்து கற்போம்

1. **தமிழறிஞர்கள் எழுதிய கடிதங்களுள் ஏதேனும் மூன்றினைத் திரட்டி வகுப்பறையில் வழங்குக.**

**தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள் தொகுப்பிலிருந்து...**

**தம்பிக்கு அண்ணாவின் கடிதம் :**

தம்பி!

சென்ற ஆண்டு பொங்கற் புதுநாளன்று உன்பக்கம் நின்றிடவும் பரிசினைப் பெற்று மகிழ்ந்திடவும் இல்லந்தனிலே,

நீ களித்திருக்கும் காட்சியினைக் கண்டு மகிழ்வு பெறும் நிலையிலே இருந்தேன். அங்ஙனம் இருந்து வந்த என்னை, அதிலே பெறும் இன்பம் வேறு எதிலும் இல்லை என்ற எண்ணம் கொண்ட என்னைப் பிடித்திழுத்துக் கொண்டுபோய் ஒரு பீடத்தில் அமர்த்திவிட்டாய்.

பெருவெற்றி அல்லவோ அண்ணா என முழக்கமிட்டாய்.

நற்காலம் பொற்காலம் என்றெல்லாம் மகிழ்கின்றாய்.

நானும் என்னாலான அளவுக்கு உன் நம்பிக்கைக்கு ஏற்றவனாக நடந்து கொள்வதில் முற்பட்டிருக்கிறேன்.

எனினும், ஒவ்வோர் ஆண்டும் இந்தப் பொங்கற் புதுநாளன்று உன் புன்னகை தவழ்ந்திடும் முகத்தினைக் கண்டு அந்தப் பொலிவினைப் போற்றித் தங்கு தடையற்ற நிலையில் இருந்து வந்த நான், கட்டுண்டு கிடக்கிறேன்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


ஒன்று நாம் உணர்கின்றோம் தம்பி! எத்தனை இன்னலுக்கிடையிலே தள்ளப்பட்டிருப்பினும், இந்தப் பொங்கற் புதுநாளில் மட்டும் நமக்கு ஒரு மகிழ்வு, நாட்டுக்கு ஒரு பொலிவு வந்து சேர்ந்துவிடத்தான் செய்கிறது.

நலிந்தோரும்கூட, இந்நாளில் புதுத்தெம்பு வரக் காண்கின்றனர். இந்நாளில் மட்டுமே உழைப்பின் பெருமையை உணர்ந்து உரையாடி மகிழ்ந்திட வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்நாளே அந்நாளில் தமிழர் வாழ்ந்த நேர்த்தி பற்றிய நினைவு எழுகிறது. நமக்கெல்லாம் எழுச்சி தரத்தக்க முறையிலும் அளவிலும் நம்மைச் சுற்றிக் காணும் பொருள் யாவும் நிலமடந்தை தந்தனள் பரிவுடன், ஆயின், பாலூட்டும் தாயும் சேயுடன் விளையாட்டுக் காட்டி, முடியாது – பிறகு – விடு – அடிப்பேன் என்று கொஞ்சுவதில்லையா; அதுபோல, நிலமடந்தையும் தன் மக்களுக்கு வளம் அளிக்கும் முன்பு, விளையாட்டுக் காட்டுவான் வேண்டி, "உழைத்துப் பெறு! உரிய நேரத்தில் பெறு! முயற்சி செய்து பெறு!" என்று அன்பு ஆணையிடுகிறாள்.

நம் காலத்து நற்புலவர்கள் இந்தப் பொங்கற் புதுநாளின் மாண்பினை நலம் உணர்ந்து உவகை கொண்டாடச் செய்துள்ளனர்.


"தமிழர் திருநாள் தை முதல் நாளாம்
அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
சளைப்பிலா முயற்சிதரு பயன்பெற்றுப்
புதுமை இன்பம் பூணும் நன்னாள்."

என்று முடியரசன் முழங்குகிறார். நாடு, ஆம் ஆம்! என்கிறது.

இத்தகு திருநாளன்று என்னால் இயன்ற அளவு கருத்து விருந்து அளித்துள்ளேன், காஞ்சி இதழ் மூலம். மற்றவற்றுடன் இதனையும் பெற்று மகிழ்ந்திருப்பாய்.

பொங்குக இன்பம்! பொங்குக புதுமை! பொங்குக பொலிவு! வளம் பெருகிடுக! வாழ்வு சிறந்திடுக! வாழ்க தமிழ்! வாழ்க தமிழகம்!

14.1.1968 அண்ணன்,



**மகளுக்கு நேருவின் கடிதம்:**

இந்திரா பிரியதர்ஷினிக்கு அவருடைய தந்தை ஜவஹர்லால் நேரு எழுதியுள்ள கடிதத் தொகுப்பைக் கொண்ட 'உலக வரலாறு' (Glimpses of World History) என்ற நூலில் தந்தைக்கும் மகளுக்கும் இடையே ஆன ஒரு பிணைப்பினையும், பாசத்தையும் உணரமுடியும்.

**கடைசி கடிதம் 9.8.1933**

மலையளவு எண்ணிக்கையில் கடிதங்கள் எழுதிவிட்டேன். அப்பப்பா. எவ்வளவு உள்நாட்டுத் தாளில் எவ்வளவு உள்நாட்டு இங்க் பயன்படுத்தியுள்ளேன். அவையனைத்தும் பயனுள்ளதா என நினைந்து வியக்கிறேன்.

இந்த அனைத்து தாள்களும், இங்கும் உனக்கு ஆர்வத்தைத் தூண்டும் செய்தியைத் தருகின்றதா? நீ 'ஆம்' என்றுதான் கூறுவாய். ஏனென்றால் வேறுவிதமாக மறுமொழி கூறினால் நான் சங்கடப்படுவேன் என்று நினைப்பாய். அவ்வாறான ஒரு நிலையை எடுக்கும்போது பாரபட்சமாகவே இருப்பாய்..........

நான் இங்கே அமர்ந்திருக்கிறேன். உனக்காக எழுதுகிறேன். உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். காலங்கள் போய்க்கொண்டே இருக்கின்றன........... நான் இக்கடிதங்களில் சொன்னதே இறுதியானது என நீ எடுத்துக்கொள்ளக்கூடாது...

இக்கடிதங்கள் அனைத்தும் மெல்லிய நூலால் இணைக்கப்பட்ட ஓர் அழகான வடிவமே... சில நூற்றாண்டுகளை விட்டுவிட்டேன். சில முக்கியமான நிகழ்வுகளையும் விட்டுவிட்டேன். அதே நேரத்தில் எனக்கு ஆர்வமானவை பற்றி அதிகம் எழுதியுள்ளேன்....




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



ஒரு மேல் தோற்றமாகத் தந்துள்ளேன். இது வரலாறன்று. இவை நமது கடந்த காலப் பதிவுகள். வரலாறு உனக்கு ஆர்வமூட்டினால் வரலாற்றின் அழகை நீ உணர்ந்தால் பல நூல்களின் துணையோடு கடந்த காலத்தைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்.....

நூல்களைப் படிப்பது மட்டுமே உனக்கு உதவப்போவதில்லை. கடந்த காலத்தைக் கருணையோடும் புரிதலோடும் நோக்கவேண்டும். பல்லாண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு நபரைப் பற்றி அறிந்துகொள்ள அவருடைய சூழலையும், அவர் வாழ்ந்த நிலையையும், அவர் மனதில் இருந்த எண்ணங்களையும் நீ அறிந்துகொள்ளவேண்டும்...

கவிஞர்களிடமிருந்தும் பிறரிடமிருந்தும் நான் உனக்காக பல மேற்கோள்களைச் சுட்டியுள்ளேன். இன்னுமொரு மேற்கோளுடன் இதனை முடிப்பேன். அது தாகூர் எழுதிய கீதாஞ்சலியிலிருந்து...... 'மனமானது எங்கு பயமின்றி இருக்கிறதோ.....'

நம் பணி நிறைவுற்றது. இந்தக் கடைசி கடிதமும் முடிந்தது. கடைசிக்கடிதம்? உண்மையில் இல்லை. இன்னும் பல கடிதங்களை எழுதுவேன். இந்த வரிசைக் கடிதம் முடிகிறது.......... (ப.954)

**மு. வரதராசனார் தம்பிக்கு எழுதிய கடிதம் :**

அன்புள்ள எழில்,

நீ எழுதிய கடிதங்கள் எனக்கும் சுவையாக இருந்தன. அன்னைக்கு எழுதிய கடிதங்களை அண்ணன் எப்படிப் பார்த்தான் என்று நீ எண்ணி வியப்பு அடையலாம். உன் கடிதங்கள் அன்னை மட்டும் அல்லாமல் அண்ணனும் படிக்க வேண்டிய கடிதங்கள்தான்.

நல்லவனாக இருந்தால் மட்டும் போதாது. வல்லவனாகவும் இருக்க வேண்டும் அல்லவா? நன்மை வன்மை இரண்டும் இருந்தால்தான் இந்த உலகில் வாழ்க்கை உண்டு. நல்ல தன்மை மட்டும் உடையவர்கள் எத்தனையோ பேர் கலங்கிக் கண்ணீர் வடித்து மாய்ந்திருக்கிறார்கள்; மாய்ந்துவருகிறார்கள். வல்லமை மட்டும் பெற்றவர்களும் எதிர்பாராதவகையில் நசுக்குண்டு அழிகிறார்கள். குடும்பங்கள் முதல் நாடுகள் வரையில் இதற்குச் சான்றுகள் காணலாம். தமிழ்நாட்டில் இருந்த பழங்காலத்து நல்லரசுகள் கலங்கி அழிந்ததை வரலாறுகளில் காணவில்லையா? ஜெர்மனி, ஜப்பான் முதலான வல்லரசுகள் அழிவுற்றதைக் கண்கூடாகக் காணவில்லையா? நல்ல மருமகளாக வந்து வாழத் தொடங்கிக் குடும்பத்தாரின் இன்னலைப் பொறுக்க முடியாமல் தற்கொலையாலோ மனவேதனையாலோ மாண்ட கதைகளை ஊர்களில் கேட்டதில்லையா? மகனையும் மருமகளையும் விருப்பம்போல் ஆட்டி வைத்து வல்லமை பெற்ற மாமியார், நல்ல தன்மையோடு வல்லமையும் சேரப்பெற்று வாழவேண்டும்.

தமிழ்மொழி நல்ல மொழி தான்; ஆனால் அதை வல்ல மொழியாக ஆக்கினோமா? பெரும்பாலோர் போற்றும் மொழியாக ஆக்கினோமோ? இன்று எதை எடுத்தாலும் மக்கள் தொகையே வல்லமையாக வைத்துப் பேசப்படவில்லையா? தமிழ் மொழிக்கு அறிவுக் கலைகளில் செல்வாக்குத் தந்தோமா? நீதிமன்றங்களில் உரிமை நல்கினோமா? ஆட்சிக் கூடங்களில் வாழ்வு வழங்கினோமா? இல்லையானால் வெறும் பேச்சு ஏன்?

தம்பி! இன்றைய உலகம் வல்லமை மிகுந்த மாமியார்போல் உள்ளது. நம் அருமைத் தமிழகம் மிக நல்ல மருமகளாக உள்ளது. ஆனால் தற்கொலையோ மனவேதனையோ எதிரே வந்து நிற்காதவாறு காப்பாற்றவேண்டிய பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. என் கருத்தில் எந்தப் பகுதி யாவது உனக்குத் தெளிவில்லாமல் இருந்தால் அதைக் குறித்து எழுது; தெளிவுபடுத்துவேன். ஏதாவது உனக்கு உடன்பாடு இல்லாமல் கருத்து வேறுபாடாக இருந்தால் எண்ணிப்பார்; அல்லது விட்டுவிடு. நான் என்ன செய்வேன்? நீ எவ்வளவு உண்மையாக உணர்கிறாயோ அவ்வளவு உண்மையாகவே நானும் உணர்கிறேன். இந்தத் தமிழகத்தில் நாம் இருவராவது ஒன்றுபட முடியாதா, பார்ப்போம்.

உன் அன்புள்ள,
வளவன்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## நிற்க அதற்குத் தக

**கீழ்க்காணும் செயல்பாடுகளைச் சரி/தவறு எனப் பிரித்து, சரியெனில் காரணமும் தவறு எனில் மாற்றுவதற்குரிய செயலையும் குறிப்பிடுக.**

| செயல்பாடு | சரி – காரணம் | தவறு – மாற்றம் |
|---|---|---|
| எ.கா. பொருள்களை எடுத்த இடத்தில் வைத்தல் | சரி. பொருள்களைத் தேடாது எடுக்க முடியும். நேரம் வீணாதல் தவிர்க்கப்படும். | |
| பொதுவிடத்தில் எச்சில் துப்புதல் | | தவறு. கழிவுநீர்க் கால்வாய்கள் மற்றும் கழிவறைகளில் துப்பலாம். |
| வகுப்பில் காகிதங்களைக் கிழித்துப் போடுதல். | | தவறு. குப்பைத் தொட்டியில் போடலாம் அல்லது சேர்த்து வைத்துப் பழைய புத்தகங்களை வாங்குவர்களிடம் கொடுக்கலாம். |
| இருக்கை, மேசைகளில் கிறுக்குதல் | | தவறு. காகிதங்களில் படம் வரையும் பயிற்சியை மேற்கொள்ளலாம். |

### படிப்போம் பயன்படுத்துவோம் (நூலகம்)

| | | | |
|---|---|---|---|
| 1. Subscription | - உறுப்பினர் கட்டணம் | 2. Archive | - ஆவணம் |
| 3. Fiction | - புனைவு | 4. Manuscript | - கையெழுத்துப் பிரதி |
| 5. Biography | - வாழ்க்கை வரலாறு | 6. Bibliography | - நூல் நிரல் |

## அறிவை விரிவு செய்

1. பாரதியின் கடிதங்கள் – ரா.அ. பத்மநாபன்
2. இலக்கண உலகில் புதிய பார்வை – டாக்டர் பொற்கோ
3. தமிழ் அழகியல் – தி.சு. நடராசன்
4. பாரதி கட்டுரைகள்
5. பாரதி கதைகள்
6. காட்டுவாத்து – ந.பிச்சமூர்த்தி
7. நெல்லூர் அரிசி – அகிலன்
8. சுவரொட்டிகள் – ந.முத்துசாமி



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





## கற்பவை கற்றபின்

### இளந்தமிழே!

**1. தமிழ்மொழிப் பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்த கருத்துகளைத் தொகுத்துக் கலந்துரையாடல் நிகழ்த்துக.**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா.

**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே! நாம் இன்றைக்குத் தமிழ் மொழிப்பாடத்தில் மொழி வாழ்த்துப் பாடல் இடம்பெறுவதன் நோக்கம் குறித்து கலந்துரையாடல் செய்யலாமா?

**மாணவர்கள்** : சரிங்க ஐயா.

**ஆசிரியர்** : அரவிந்தன், அஸ்வின், பிரியா, செந்தாழினி நால்வரும் வந்து கலந்துரையாடல் செய்க.

**அரவிந்தன்** : நம்முடைய தாய்மொழியான தமிழ்மொழியை வளர்ப்பதுதான் நோக்கம்.

**அஸ்வின்** : நம் தமிழ்மொழியின் பெருமைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையிலும் போற்ற வேண்டும் என்பதாலும் மொழி வாழ்த்துப்பாடல் இடம்பெறுகிறது.

**செந்தாழினி** : "கல் தோன்றி மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மொழி" நம் தமிழ்மொழி. பழங்காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது நம்மொழி மட்டுமே. இந்தத் தமிழ்மொழி என்றும் இருக்க வேண்டும் என்பதால் அதனை வாழ்த்திப் பாடப்படுகிறது.

**ஸ்ரீபிரியா** : இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் பரவிக் கிடக்கிறது. மேலும் மேலும் பரவவும் உயிர்ப்போடும் இருக்க வேண்டும் என்பதற்காக வாழ்த்திப் பாடப்படுகிறது.

**செந்தாழினி** : உலக மொழிகளில் சிறந்த இலக்கண இலக்கிய நூல்களைக் கொண்ட ஒரே மொழி நம் தமிழ்மொழி என்பது மிகையாகாது.

**ஆசிரியர்** : மிக அருமையாக கூறினீர்கள் மிக்க மகிழ்ச்சி.

### தமிழ்மொழியின் நடை அழகியல்

**1. கவிஞர் பாரதிதாசனின் அழகின் சிரிப்பு - குன்றம் - ஒளியும் குன்றும் பாடலில் இடம்பெற்றுள்ள நடைச் சிறப்பினைத் தொகுத்து உரையாக வழங்குக.**

பாரதிதாசன் அழகின் சிரிப்பு கவிதையை மிக அழகாக எளிய நடையில் ஒரு குழந்தையின் சிரிப்பைப் போல் காட்சிப்படுத்தி இருக்கிறார். குன்றம் என்றால் மலை. குன்றம் பற்றி அழகின் சிரிப்பு என்னும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

தங்கத்தை உருக்கிவிட்ட
வானோடை தன்னிலே ஓர்
செங்கதிர் மாணிக்கத்துச்
செழும்பழம் முழுகும் மாலை
செங்குத்தாய் உயர்ந்த குன்றின்
மரகதத் திருமேனிக்கு
மங்காத பவழம் போர்த்து
வைத்தது வையம் காண!

www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

தங்கத்தை உருக்கிவிட்டது போல உள்ளது சூரியனின் மாலையில் வீசும் செங்கதிர் ஒளியானது குன்றம் மீது பட்டதும். ஒலிக் கோலங்களும் சொற்களின் புலமும் தொடரியல் போக்குகளும் மிக அழகாக வருணனை செய்யப்பட்டு உள்ளது.

அருவிகள், வயிரத் தொங்கல்!
அடர்செடி, பச்சைப்பட்டே!
குருவிகள், தங்கக்கட்டி!
குளிர்மலர், மணியின் குப்பை!
எருதின்மேற் பாயும் வேங்கை,
நிலவுமேல் எழுந்த மின்னல்,
சருகெல்லாம் ஒளிசேர் தங்கத்
தகடுகள் பாரடா நீ!

அருவிகள், அடர்செடி கொடிகள், குருவிகள், குளிர்மலர்கள், தங்கம், பட்டு, வேங்கைகள் போன்றவைகளை உவமையாகக் கொண்டு அழகாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார் கவிஞர். அனைவரும் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் புதுக்கவிதை வடிவில் படைத்துள்ளார்.

இந்தப் பாடலில் உள்ள இயற்கை சொற்களில் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன. அழகாக இயற்கை வருணனை செய்யப்பட்டுள்ளது. புதுக்கவிதை வடிவமைப்பில் எளிய நடையில் இருக்கிறது.

**2. தமிழின் சொல்வளத்தை வெளிப்படுத்தும்படியாக யானை/மலர் குறித்த பல சொற்களை அகராதியில் கண்டு பட்டியலிடுக.**

**யானை குறித்த பல சொற்கள் :**

களிறு, களபம், மாதங்கம், ஆனை, கும்பி, தும்பி, போதகம் மதகயம், பிடி, கரிணி, வடவை, அதவை குஞ்சரம், வல்விலங்கு, கைம்மா(துதிக்கையுடைய விலங்கு)

**மலர் குறித்த பல சொற்கள் :**

பூ, அரும்பு, முகை, மொட்டு, மொக்குள், அலரி.

## தன்னேர் இலாத தமிழ்

**1. வேற்றுமை அணி பயின்று வரும் இரு பாடல்களை விளக்கத்துடன் எழுதி வருக.**

**பாடல் 1 :**

அனைத்து உலகும் சூழ்போய், அரும்பொருள் கைக்கொண்டு,
இனைத்து அளவைத்து என்றற்கு அரிதாம் – பனிக்கடல்
மன்னவ! நின் சேனைபோல்; மற்று அது நீர்வடிவிற்று
என்னும் இது ஒன்றே வேறு.

**விளக்கம் :**

மன்னவனே! கடலும் நின் சேனையும் ஒரே வகையான இயல்பு உடையவை. குளிர்ந்த கடல், உலகம் முழுவதையும் சூழ்ந்து, பல அரிய பொருள்களைத் தன்னகத்தே கொண்டு, இன்ன அளவை உடையது என்று அளப்பதற்கு அரியதாய் உள்ளது; உன் சேனையும் பல நாடுகளையும் கைப்பற்றுவதற்கு உலகம் முழுவதையும் சூழ்ந்து, பகை நாட்டு அரசர்களின் அரிய பொருள்களை எல்லாம் கைக்கொண்டு, இன்ன அளவை உடையது என்று அளப்பதற்கு அரியதாய் உள்ளது. ஆனால், கடல் 'நீர் வடிவில் உள்ளது' என்னும் ஓர் இயல்பு மட்டும்தான் இரண்டுக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும்.





www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**பாடல் 2 :**

மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள
ஒலியும் பெருமையும் ஒக்கும்; – மலிதேரான்
கச்சி படுவ கடல்படா; கச்சி
கடல்படுவ எல்லாம் படும்.

**விளக்கம் :**

மிக்க தேர்ப்படையை உடைய எம்முடைய அரசனுடைய காஞ்சி மாநகரும் பெரிய கடலும் தமக்குள்ளே ஒலியாலும் பெருமையாலும் ஒத்தவை. எனினும் காஞ்சி மாநகரில் உள்ளவை எல்லாம் கடலில் இல்லை; கடலில் இருப்பவை எல்லாம் காஞ்சி மாநகரில் உள்ளன.

**2. 'தன்னேர் இலாத தமிழ்' என்னும் தலைப்பில் சொற்போரில் பங்கேற்பதற்கான ஐந்து நிமிட உரை உருவாக்குக.**

**விடை :**

தமிழ்மொழியானது தமிழ் மக்களின் அடையாளம் பண்பாட்டின் நீட்சி; "கல்தோன்றா மண் தோன்றா காலத்து முன் தோன்றிய மூத்த மொழி தமிழ்மொழி" மொழி தோன்றிய காலந்தொட்டு மக்களால் பேசப்பட்டு, எழுதப்பட்டு உயிர்ப்போடும் இளமையோடும் இருப்பது நம் மொழி மட்டுமே. தமிழ்மொழிக்கு இணையான எம்மொழியும் இல்லை இவ்வுலகில் என்பது மிகையாகாது.

இன்றும் தமிழ்மொழியின் புகழ் எத்திசையும் பரவிக் கிடக்கிறது. தமிழ்மொழி பல புதிய உள்ளடக்கங்களால் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு பழஞ்சிறப்பைத் தக்க வைத்துக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் இன்றும் தமிழ் செழித்துக் கொண்டே இருக்கிறது.

உலகிலேயே சிறந்த இலக்கண இலக்கியங்களைக் கொண்ட மொழி தமிழ். தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்களுக்கு ஈடாக உலகில் எம்மொழியிலுமில்லை. உயர்தனிச் செம்மொழியாம் தமிழ் தமிழர்களின் அழகுணர்வு, மலரும் மணமும் போலக் கவிதையுடன் இரண்டறக் கலந்துள்ளது. உணர்ச்சியைப் பாய்ச்சும் வித்தில் தீங்கவிகளைச் செவியாரப் பருகச் செய்து கற்போர் இதயம் கனியும் வண்ணம் படைக்கும் அழகியல் உணர்வுகளைக் கொண்டு இலக்கியங்களைப் படைத்து உலக மொழிகளில் சிறந்த மொழியாக திகழச் செய்கிறார்கள்.

சங்க இலக்கியங்கள் அகத்திணை சார்ந்த செய்திகளையும் புறத்திணைச் சார்ந்த செய்திகளையும் படிக்கும்போது மக்களின் மனதைக் கவரச் செய்கிறது. இதனால்தான் தமிழ்மொழியானது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உயிர்ப்போடு சிறந்த மொழியாக உலக மக்களால் போற்றப்படுகிறது. எனவே தன்னேர் இலாத தமிழ் மொழி என்பதில் மிகையாகாது.

## தம்பி நெல்லையப்பருக்கு

**1. பாரதியின் வாழ்வினைக் காலக்கோடாக உருவாக்குக.**

(i) **1882** – ஆம் ஆண்டு டிசம்பர் 11-ல் சின்னசாமி - இலக்குமி தம்பதிக்கு திருநெல்வேலி அருகே உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார்.

(ii) **1897** – ஆம் ஆண்டு செல்லம்மாளை மணந்தார்.

(iii) **1898** – முதல் 1902 வரை – காசிக்குச் சென்று சென்று தங்கி இருந்தார்.

(iv) **1904** – ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் "விவேகபானு" இதழில் வெளியானது.

(v) **1904** – முதல் 1906 ஆகஸ்ட் வரை சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

(vi) **1907** – ஆம் ஆண்டில் “இந்தியா” என்னும் வார இதழையும் “பாலபாரதம்” என்ற ஆங்கில இதழையும் பொறுப்பேற்று நடத்தினார்.

(vii) **1908** – ஆண்டு முதல் “இந்தியா” பத்திரிகை புதுவையில் இருந்து வெளிவர துவங்கியது.

(viii) **1912** – ஆம் ஆண்டு பகவத் கீதையை தமிழ்மொழியில் மொழிபெயர்த்தார்.

(ix) **1918** – ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டு 34 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டார்.

(x) **1919** – ஆம் ஆண்டு மீண்டும் சென்னைக்கு வந்து மகாத்மா காந்தி, இராஜாஜியை சந்தித்தார்.

(xi) **1921** – ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் தேதி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

2. **காலத்தை வென்ற மகாகவியான பாரதிக்குக் கற்பனை கடிதம் ஒன்றினை எழுதுக.**

இடம் : மொடையூர்,

நாள்: 20.05.2019.

அன்புள்ள மகாகவி பாரதி அவர்களுக்கு,

வணக்கம். நான் இங்கு நலம். நீங்கள் நலமா? உங்களுடைய உடல் நலம் நன்றாக இருக்கும்படி கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன். உங்களுடைய படைப்புகள் அனைத்தையும் நான் படித்துள்ளேன். ஒரு சிறந்த மனிதனாக இருக்க வேண்டும் என்று நினைப்பவர்கள் உங்களுடைய படைப்புகளை மட்டும் படித்தாலே போதும். உங்கள் படைப்புகளில் எனக்கு மிகவும் பிடித்தது.

“அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் – அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்;
வெந்து தணிந்தது காடு; தழல் வீரத்தில்
குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?”

இந்தப் பாடலானது நம் வீரத்தின் அடையாளமாக திகழ்கிறது எனலாம்.

நேர்மையின் மறு உருவம் நீ! ஒழுக்கத்தின் உருவமே! வீரத்தை வளர்த்த வீரமே! உன்னால் இந்நாட்டில் வீரம் பிறந்தது. அதனால் விடுதலை பிறந்தது. இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்களிடம் அடிமையாக இருந்த நம் நாட்டை வீரம் மிகுந்த பாடல்களைப் பாடி ஒவ்வொரு குடிமகனையும் வீரனாக்கி விடுதலை பெற செய்தவனே! உன் புகழ் என்றென்றும் வாழும் வளரும். முதன்முதலில் பெண்ணடிமையைப் பேசியவன் நீயே உன்னால் பெண்களும் ஆணாதிக்கத்திலிருந்து விடுப்பட்டு கல்வி கற்று அனைத்து அரசாங்க பதவிகளில் இருக்கிறார்கள்.

உன்னால் மட்டுமே முடியும் எல்லாவற்றையும் சாதித்துக்காட்ட, உன் வழியை பின்பற்றினால் என்னாலும் முடியும். உன் புகழ் ஓங்குக. வாழ்க.

இப்படிக்கு
செ. ஜெயஸ்ரீ செந்தாமரை

உறைமேல் முகவரி

| |
|---|
| மகாகவி பாரதியார்,<br>எண் – 153 பெருமாள் கோயில் சன்னதி,<br>எட்டயபுரம்,<br>தூத்துக்குடி மாவட்டம். |



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





## தமிழாய் எழுதுவோம்

**1. மயங்கொலி எழுத்துகள் (ண, ந, ன, ல, ழ, ள, ர, ற) அமைந்த சொற்களைத் திரட்டி, பொருள் வேறுபாடு அறிந்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**மாணவர்கள்** : வணக்கம் ஐயா!

**ஆசிரியர்** : வணக்கம் மாணவர்களே! இன்று நாம் மயங்கொலி எழுத்துகள் சொற்கள், பொருள் வேறுபாடு பற்றி கலந்துரையாடுவோமா?

**மாணவர்கள்** : சரி ஐயா,

**மாலதி** : ந, ண, ன, ல, ள, ழ, ற, ர என்பவைகள் மயங்கொலி எழுத்துகள் ஆகும்.

**தமிழ்** : அறம் – ஒழுக்கம், அரம் – கருவி. சொற்கள் ஒன்றாக இருந்தாலும் பொருள் வேறுபடுகிறது.

**மாலதி** : மழை – மலை, மழை – மழையைக் குறிக்கிறது, மலை – மலையைக் குறிக்கிறது. ஆனால் வேறுபடுகிறது.

**கருணா** : கிளி – கிலி. கிளி என்பது பறவையைக் குறிக்கும். கிலி பயத்தைக் குறிக்கும். பொருள் வேறுபடுகிறது.

**குணா** : குறை – குரை, குறை – பிழை என்று பொருள், குரை – குரைத்தல் என்று பொருள், சொற்கள் ஒன்றாக இருந்தாலும் பொருள் மாறுபடுகிறது.

**மாலதி** : கண்டு – கன்டு. கண்டு (பார்த்தல்) என்று வரும். கன்டு என்று வருவதில்லை. மன்றம் என்று வரும் மண்றம் என்று வருவதில்லை.

**கருணா** : அதேபோல் நண்டு – உயிரினம் என வரும். நன்டு – என வராது.

**ஆசிரியர்** : மாணவர்களே! எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன, ல, ள, ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு பற்றி தெரிந்து வைத்துள்ளீர்கள் மிக்க மகிழ்ச்சி.

**மாணவர்கள்** : நன்றி, ஐயா.

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்.

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்.

இ) காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.

ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின. [விடை: இ) **காளையில் பூத்த மல்லிகை மனம் வீசியது.**]

**2. பேச்சுத்தமிழில் அமைந்த தொடரைத் தேர்க.**

அ) அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.

ஆ) புத்தகக் கண்காட்சி நடைபெறுகிறது

இ) வறட்சி எல்லா இடங்களையும் பாதித்துள்ளது.

ஈ) மயில்கள் விறலியரைப் போல் ஆடுகின்றன.

[விடை: அ) **அவருக்கு நல்லது கெட்டது நல்லாத் தெரியும்.**]



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

3. **முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.**

(i) நான் இன்று மாலை ஊருக்கு **முடிந்தால்** வருவேன். உன்னிடம் இருக்கும் புத்தகங்களை எனக்கு **தரலாமே.**

(ii) இவ்வேலையை செய்து **முடித்தால்** பரிசு **தரலாம்.**

4. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**

**தமிழில் பிழையின்றி எழுதுவற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள்:**

(i) எழுத்தினைத் தெளிவாக உச்சரிக்கப் பழக வேண்டும். ந, ண, ன, ல, ள, ழ, ற, ர ஒலிப்பு வேறுபாடு தெரிந்து உச்சரிக்கப் பழகுதல் வேண்டும்.

(ii) தமிழில் இவ்வெழுத்துகள் வரும் முறையையும், அவை ஏற்படுத்தும் பொருள் மாற்றத்தையும் அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகும்.

(iii) தொடக்கத்தில் சில காலம் வாய்விட்டோ அல்லது மனதுக்குள் உச்சரித்தபடியோ எழுதப் பழகுவது நல்லது.

(iv) வேகமாக எழுத முயல்வது பிழைக்கு வழிவகுக்கும்.

(vi) கெ, கே, கொ, கோ போன்று கொம்புடைய குறில் நெடில் வேறுபாட்டினைப் புரிந்து எழுத வேண்டும். மேற்கண்ட முயற்சிகளைக் கடைப்பிடித்தால் தமிழில் பிழையில்லாமல் எழுதலாம்.

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. **தி.சு. நடராசன் எழுதிய நூல்**

அ) தமிழ் அழகியல் ஆ) கானல்வரி
இ) பிறந்தது எப்படியோ ஈ) தமிழா நினைத்துப்பார் [விடை: அ) தமிழ் அழகியல்]

2. **தி.சு. நடராசனால் எழுதப்படாத நூல்.**

அ) கவிதையெனும் மொழி ஆ) திறனாய்வுக் கலை
இ) தமிழ் அழகியல் ஈ) பிறந்தது எப்படியோ

[விடை: ஈ) பிறந்தது எப்படியோ]

3. **'இடுக வென்றோ, சுடுக வென்றோ;
படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே' என்ற வரிகள் இடம்பெற்ற நூல்**

அ) புறநானூறு ஆ) குறுந்தொகை
இ) பரிபாடல் ஈ) அகநானூறு [விடை: அ) புறநானூறு]

4. **போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியவர்.**

அ) தி.சு.நடராசன் ஆ) தேவதேவன்
இ) தெ.பொ. கிருஷ்ணசாமி ஈ) தி.ஜானகிராமன் [விடை: அ) தி.சு.நடராசன்]





www.surabooks.com

5. **திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவர்.**

அ) மயிலை சீனி. வேங்கடசாமி

ஆ) பொ.வே. சோமசுந்தரனார்

இ) தி.சு.நடராசன்

ஈ) மறைமலையடிகள் **[விடை: இ) தி.சு.நடராசன்]**

6. **“ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**

**ஏங்கொலிநீர் ஞாலத்[து] இருளகற்றும்” - இவ்வடிகளில் பயின்று வந்துள்ள அடி எதுகை சொற்களைக் கண்டறி.**

அ) வந்து - உயர்ந்தோர் ஆ) ஓங்கலிடை - உயர்ந்தோர்

இ) ஓங்கலிடை - ஏங்கொலிநீர் ஈ) ஞாலத்து - இருளகற்றும்

**[விடை: இ) ஓங்கலிடை - ஏங்கொலிநீர்]**

7. **அணியிலக்கணத்தை மட்டும் கூறும் இலக்கண நூலைக் கண்டறி.**

அ) தொல்காப்பியம் ஆ) மாறனலங்காரம்

இ) வீரசோழியம் ஈ) முத்து வீரியம் **[விடை: ஆ) மாறனலங்காரம்]**

8. **கீழ்க்கண்டவற்றுள் அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்.**

அ) தண்டியலங்காரம் ஆ) மாறனலங்காரம்

இ) குவலயானந்தம் ஈ) இலக்கண விளக்கம் **[விடை: ஈ) இலக்கண விளக்கம்]**

9. **.......... என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்டது தண்டியலங்காரம்.**

அ) காவிய தர்சம் ஆ) இலக்கண கொத்து

இ) இந்திர வியாகரணம் ஈ) கௌமாரம் **[விடை: அ) காவிய தர்சம்]**

10. **வெங்கதிர் - இலக்கண குறிப்பைக் கண்டறி.**

அ) பண்புத் தொகை ஆ) வினைத் தொகை

இ) உவமைத் தொகை ஈ) உம்மைத் தொகை **[விடை: அ) பண்புத் தொகை]**

11. **ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் .......... என்ற செய்யுளில் இடம் பெற்றுள்ள பாவகை.**

அ) ஆசிரியப்பா ஆ) நேரிசை வெண்பா

இ) இன்னிசை வெண்பா ஈ) பஃறொடை வெண்பா **[விடை: ஆ) நேரிசை வெண்பா]**

12. **தண்டியலங்காரம் ............... இயல்களையும் ............... நூற்பாக்களையும் பெற்றுள்ளது.**

அ) 6, 126 ஆ) 3, 123

இ) 3, 126 ஈ) 4, 123 **[விடை: இ) 3, 126]**

13. **தண்டியார் வாழ்ந்த காலம் ................**

அ) கி.பி. 12 ஆம் நூற்றாண்டு ஆ) கி.பி 8 ஆம் நூற்றாண்டு

இ) கி.பி. 7 ஆம் நூற்றாண்டு ஈ) கி.பி. 9 ஆம் நூற்றாண்டு

**[விடை: அ) கி.பி. 12 நூற்றாண்டு]**

இயல் 1

www.surabooks.com

14. கூற்று 1 : ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்...... என்னும் செய்யுளில் பொருள் வேற்றுமை அணி பயின்று வந்துள்ளது.

காரணம் 2 : இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

அ) கூற்றும், காரணமும் சரி ஆ) கூற்று சரி, காரணம் தவறு

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்றும், காரணமும் தவறு

[விடை: அ) கூற்றும், காரணமும் சரி]

15. இருவேறு பொருள்களுக்கான ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டும் அணி ..............

அ) தற்குறிப்பேற்ற அணி ஆ) தன்மையணி

இ) பொருள் வேற்றுமை அணி ஈ) உருவக அணி

[விடை: இ) பொருள் வேற்றுமை அணி]

## கூடுதல் 1 மதிப்பெண் வினா விடைகள்

1. சொல்வளம் என்பது தனிச்சொற்களாய் நிறைந்து அமைவதைக் குறிக்கும்.
2. 'கிடை' எனும் குறுநாவலில் ஆடுகளில் அடையாளங்களைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார் கி.ராஜநாராயணன் .
3. காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலைத் தழுவி எழுதப்பட்ட இந்நூலின் ஆசிரியர் தண்டி ஆவார்.
4. அணி இலக்கணத்தைக் கூறும் சிறப்பான நூல்களில் ஒன்று தண்டியலங்காரம்.
5. தண்டியலங்காரம் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்று பெரும்பிரிவுகளை உடையது.
6. எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றி கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூலை 1879இல் வெளியிட்டார்.
7. வம்சமணிதீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசை மணி என்பவரால் 2008இல் அப்படியே வெளியிடப்பட்டது.
8. பரலி சு.நெல்லையப்பர் விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டவர்.
9. மொழியை மிகச் சிறந்த கருவி என்பர்.
10. நகரம் மட்டுமே சொல்லின் தொடக்கமாக வரும்.
11. றகர மெய் சொல்லின் இறுதியில் வராது.
12. தமிழ் சொல்லின் தொடக்கமாக வராத எழுத்துகள் மெய்யெழுத்துகள்.
13. இம் மெய்களை அடுத்து மெய்கள் வருவதில்லை ட், ற்.
14. ஆய்த எழுத்து சொல்லின் இடையில் மட்டுமே வரும்.
15. உயிர்மெய் எழுத்துகள் 216.
16. உயிர்மெய்க்குறில் எழுத்துகள் 90
17. உயிர்மெய்நெடில் எழுத்துகள் 126.



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





## இலக்கணக் குறிப்பு

1. செம்பரிதி, செந்தமிழ், செந்நிறம் – பண்புத்தொகைகள்
2. முத்துமுத்தாய் – அடுக்குத்தொடர்
3. சிவந்து – வினையெச்சம்
4. வியர்வைவெள்ளம் – உருவகம்
5. வெங்கதிர் – பண்புத்தொகை
6. உயர்ந்தோர் – வினையாலணையும் பெயர்
7. இலாத – இடைக்குறை

## பகுபத உறுப்பிலக்கணம் காண்க

1. சாய்ப்பான் – சாய் + ப் + ப் + ஆன்
   - சாய் – பகுதி
   - ப் – சந்தி
   - ப் – எதிர்கால இடைநிலை
   - ஆன் – படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி
2. விம்முகின்ற – விம்மு + கின்று + அ
   - விம்மு – பகுதி
   - கின்று – நிகழ்கால இடைநிலை
   - அ – பெயரெச்ச விகுதி
3. வியந்து – விய + த்(ந்) + த் + உ
   - விய – பகுதி
   - த் – சந்தி (ந் ஆனது விகாரம்)
   - த் – இறந்தகால இடைநிலை
   - உ – வினையெச்ச விகுதி
4. இருந்தாய் – இரு + த்(ந்) + த் + ஆய்
   - இரு – பகுதி
   - த் – சந்தி (ந் ஆனது விகாரம்)
   - த் – இறந்தகால இடைநிலை
   - ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
5. உயர்ந்தோர் – உயர் + த்(ந்) + த் + ஓர்
   - உயர் – பகுதி
   - த் – சந்தி (ந் ஆனது விகாரம்)
   - த் – இறந்தகால இடைநிலை
   - ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி (ஆர் என்பதன் ஈற்றயலெழுத்தான "ஆ" "ஓ" ஆகத் திரியும் (நன் 353)



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**6.** விளங்கி – விளங்கு + இ
விளங்கு– பகுதி
இ – வினையெச்ச விகுதி

**7.** வந்து – வா(வ்) + த்(ந்) + த் + உ
வா – பகுதி (வ– எனக் குறுகியது விகாரம்)
த் – சந்தி(ந் ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
உ – வினையெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

**1.** **செம்பரிதி** = செம்மை + பரிதி
**விதி** : ஈறுபோதல் – செம் + பரிதி – செம்பரிதி.

**2.** **வானமெல்லாம்** = வானம் + எல்லாம்
**விதி** : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – வானமெல்லாம்

**3.** **உன்னையல்லால்** = உன்னை + அல்லால்
**விதி** : இ, ஈ, ஐ வழி யவ்வும் – உன்னை + ய் + அல்லால்
**விதி** : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – உன்னையல்லால்

**4.** **செந்தமிழே** = செம்மை + தமிழே
**விதி** : ஈறு போதல் – செம் + தமிழே
விதி : முன்னின்ற மெய் திரிதல் – செந்தமிழே

**5.** **ஆங்கவற்றுள்** = ஆங்கு + அவற்றுள்
**விதி** : உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் – ஆங்க் + அவற்றுள்
**விதி** : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – ஆங்கவற்றுள்

**6.** **தனியாழி** = தனி + ஆழி
**விதி** : இ, ஈ, ஐ வழி யவ்வும் – தனி + ய் + ஆழி
**விதி** : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே – தனியாழி

**7.** **வெங்கதிர்** = வெம்மை + கதிர்
**விதி** : ஈறுபோதல் – வெம் + கதிர்
**விதி** : முன்னின்ற மெய் திரிதல் – வெங்கதிர்

## குறுவினா

**1.** **மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை எவை?**

உவமம், உருவகம், எச்சம், குறிப்பு, உள்ளுறை, இறைச்சி முதலியன மொழியின் இயல்பு வழக்குகளைக் கலையியல் வழக்குகளாக மாற்றுபவை ஆகும்.



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**2. கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்றால் என்ன?**

(i) இலக்கியம் என்ற மொழிசார் கலை, மொழியின் தனித்துவமான பண்புகளை மட்டும் தனக்குரியதாக்கி, இலக்கியத்திற்கு ஒரு சிறப்புத் தன்மையைத் தந்துவிடுகிறது.

(ii) இத்தகைய தன்மைதான் கவிதைத்தனம் அல்லது இலக்கியத்தனம் என்று அழைக்கப்படுகிறது.

**3. ஒலிப்பின்னல் என்றால் என்ன?**

(i) எந்தத் தொன்மையான மொழியும், சமிக்ஞையிலிருந்தும், இசையிலிருந்தும்தான் தொடங்குகிறது. மொழி சார்ந்த கவிதையும் இசையோடும், இசைக் கருவியோடும் தான் பிறக்கிறது.

(ii) ஓசையும் பொருளும் இணைந்து கலைவடிவம் கொள்கின்றன. இதனையே அந்தப் பனுவலின் – பாடலின் ஒலிப்பின்னல் என்கிறோம்.

**4. ஒரு கவிதைக்குச் சொற்புலம் மிகவும் அவசியம் என்பதை விளக்குக.**

(i) சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.

(ii) கலையும் பண்பாடும் வரலாறும், அரசியலும் பொதிந்து கிடக்கின்றன. சங்க இலக்கியத்தில் சொல்வளம் மலர்ந்தும், கனிந்தும் கிடக்கிறது.

(iii) முல்லைக்கலியில், காளைகளில் பல இனங்களைக் காட்டுகிற சொற்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

**5. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?**

(i) தண்டியலங்காரம்

(ii) மாறனலங்காரம்

(iii) குவலயானந்தம்.

**6. அணியிலக்கணத்தையும் கூறும் இலக்கண நூல்கள் யாவை?**

(i) தொல்காப்பியம்

(ii) வீரசோழியம்

(iii) இலக்கண விளக்கம்

(iv) தொன்னூல் விளக்கம்

(v) முத்துவீரியம்.

**7. உலகத்தின் புற இருளைப் போக்குவது எது?**

மக்களால் போற்றப்பட்டு பொதிகை மலையில் தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒளிர்கின்ற கதிரவன் ஆகும்.

**8. மக்களின் அறியாமை இருளைப் போக்குவது எது?**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவது தமிழ்மொழியாகும்.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**9. பேச்சுவழக்கில் ஏற்படும் பிழைகள் சிலவற்றை எழுதுக.**

(i) நம்மில் பலர் பிழைபடப் பேசுவதால்தான் எழுதும்போது பிழைகள் பெருகுகின்றன.

(ii) உதாரணமாக தமிழைத் தமில் என்றும், மழையை மலை என்றும், வாழைப்பழத்தை வாலப்பலம், வாளப்பலம், வாயைப்பயம் என்றும் பிழையோடு பேசுவர்.

**10. ஒரு மொழியின் அடிப்படை அறிவு என்பது எது?**

ஒரு மொழியின் அடிப்படை அறிவு என்பது அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும், சொற்களையும், அவற்றின் பொருளையும், வாக்கிய அமைப்புகளையும் தெரிந்திருப்பதே ஆகும்.

**11. ஒரு மொழியின் இலக்கணம் எவற்றை உள்ளடக்கியதாய் இருக்கும்?**

ஒரு மொழியின் இலக்கணம் அந்த மொழியில் உள்ள எழுத்துகளையும் சொற்களையும் அவற்றின் பொருள் வாக்கிய அமைப்புகளையும் உள்ளடக்கியதாய் இருக்கும்.

**12. எழுதும்போது ஏற்படும் பிழைகளை எத்தனை வகையாக பிரிக்கலாம்? அவை யாவை?**

எழுதும்போது ஏற்படும் பிழைகளை நான்கு வகையாக பிரிக்கலாம். அவையாவன:

(i) எழுத்துப்பிழை
(ii) சொற்பொருட்பிழை
(iii) சொற்றொடர்ப்பிழை
(iv) பொதுவான பிழை என்பனவாகும்

**13. மெய்யெழுத்துகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

மெய்யெழுத்துகள் மூன்று வகைப்படும். அவை
(i) வல்லின மெய்கள் – க்,ச்,ட்.த்,ப்,ற்
(ii) மெல்லின மெய்கள் – ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்
(iii) இடையின மெய்கள் – ய்,ர்,ல்,வ்,ழ்,ள் என்பனவாகும்.

## சிறுவினா

**1. சிற்பி பாலசுப்பிரமணியம் - குறிப்பு எழுதுக.**

(i) சிற்பி பாலசுப்பிரமணியம் கவிஞர், பேராசிரியர், மொழிபெயர்ப்பாளர், இதழாசிரியர் எனப் பன்முகம் கொண்டவர். பாரதியார் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர்.

(ii) மொழிபெயர்ப்புக்காகவும், ஒரு கிராமத்து நதி என்னும் கவிதை நூலிற்காகவும் இருமுறை சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இவருடைய கவிதைகள் ஆங்கிலம், கன்னடம், மலையாளம், மராத்தி, இந்தி ஆகியவற்றில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

(iii) இவர் ஒளிப்பறவை, சர்ப்பயாகம், சூரிய நிழல், ஒரு கிராமத்து நதி, பூஜ்யங்களின் சங்கிலி முதலிய பல கவிதை நூல்களை ஆக்கியவர்; இலக்கியச் சிந்தனைகள், மலையாளக் கவிதை, அலையும் சுவடும் உள்ளிட்ட உரைநடை நூல்களையும் எழுதியுள்ளார்.

(iv) மலையாளத்திலிருந்து கவிதைகளையும் புதினங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்; சாகித்திய அகாதெமியின் செயற்குழு உறுப்பினராகவும் இருக்கிறார்.





www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**2. தி.சு. நடராசன் - குறிப்பு எழுதுக.**

(i) திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி.சு. நடராசன் குறிப்பிடத்தக்கவர்.

(ii) இவர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், போலந்து நாட்டின் வார்சா பல்கலைக்கழகம், திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிந்தவர்.

(iii) கவிதையெனும் மொழி, திறனாய்வுக்கலை, தமிழ் அழகியல், தமிழின் பண்பாட்டு வெளிகள் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்.

**3. கலை முழுமை என்றால் என்ன?**

(i) இலக்கியத்தின் 'பயன்' பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு. அறம், பொருள், இன்பமாகவோ அல்லது வேறு ஏதோ ஓர் உயர்ந்த குறிக்கோளாகவோ, இந்தப் பயன் இலக்கிய உருவாக்கத்தில் இடம்பெற வேண்டும்.

(ii) பின்னால் வந்தவர்கள் இதனை இயந்திரப் போக்காகத் தனியாக – ஒட்டாமல் – கூறியுள்ளனர். ஆனால் தொல்காப்பியம் மிகவும் தெளிவாக, இலக்கியத்தின் நோக்கம், அல்லது அறிவியல் சார்ந்த கருத்துநிலைகள், கலை உருவாக்கத்தின்போதே சரிவர இணைந்திருக்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டியுள்ளது.

(iii) இத்தகையதொரு முழுமைதான், கலை முழுமை (artistic whole) எனப்படுகிறது.

**4. தமிழில் சில தொகைமொழிகளை எழுதுக.**

| | |
|---|---|
| (i) வைகுறு விடியல் | (ii) கன்னி விடியல் |
| (iii) புல்லென் மாலை | (iv) நள்ளென் யாமம் |
| (v) காமர் வனப்பு | (vi) மாண்கவின் காண்டகு வனப்பு |
| (vii) கவினுறு வனப்பு | (viii) தீநீர் |
| (ix) நெடுநீர் | (x) சின்னீர் |
| (xi) பனிநீர் | (xii) ஒலிவெள்ளருவி |
| (xiii) பறைக்குரல் எழிலி | (xiv) பொய்படு சொல் |
| (xv) நகைக்கூட்டம் | (xvi) ஓவச்செய்தி இப்படி ஓராயிரம் சொற்கள் தமிழில் உள்ளன. |

**5. வம்சமணி தீபிகை - விளக்குக.**

(i) எட்டயபுரம் மன்னர்களின் பரம்பரை வரலாறு பற்றிக் கவிகேசரி சாமி தீட்சிதர் என்பவர் வம்சமணி தீபிகை என்னும் நூலை 1879இல் வெளியிட்டார்.

(ii) அப்பதிப்பைத் திருத்தி வெளியிட ஆசைகொண்ட பாரதி, ஆட்சி செய்த வெங்கடேசுர எட்டப்பருக்கு 6.8.1919இல் கடிதம் எழுதினார்.

(iii) பலவிதமான குற்றங்களையுடைய அந்நூலை நல்ல இனிய தமிழ்நடையில் அமைத்துத் தருவேன் என்று குறிப்பிட்டார். ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை.

(iv) வம்சமணி தீபிகை நூலின் மூலவடிவம் மறுபதிப்பாக இளசை மணி என்பவரால் 2008இல் அப்படியே வெளியிடப்பட்டது.

**6. சு. நெல்லையப்பர் - குறிப்பு எழுதுக.**

(i) பரலி சு. நெல்லையப்பர் விடுதலைப் போராட்ட வீரர், கவிஞர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், இதழாளர், பதிப்பாளர் எனப் பன்முகம் கொண்டவர்.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



(ii) பாரதியின் கண்ணன் பாட்டு, நாட்டுப்பாட்டு, பாப்பாப்பாட்டு, முரசுப்பாட்டு ஆகியவற்றைப் பதிப்பித்தவர். பாரதி நடத்திய சூரியோதயம், கர்மயோகி ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் லோகோபகாரி, தேசபக்தன் ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் பிறகு ஆசிரியராகவும் பணியாற்றியவர்.

(iii) இவர் நெல்லைத் தென்றல், பாரதி வாழ்த்து, உய்யும் வழி ஆகிய கவிதை நூல்களையும் வ.உ.சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார்.

(iv) பாரதியாரை விட ஏழாண்டுகள் இளையவரான பரலி சு. நெல்லையப்பரைப் பாரதி தன்னுடைய அருமை தம்பியாகவே கருதி அன்புகாட்டி வந்தார்.

**7. ந, ண, ன, ற, ர, ல, ள, டி ஆகிய எழுத்துகள் மொழியில் அமையும் விதம் குறித்து எழுதுக.**

| முதல் | இடை | கடை |
|---|---|---|
| நண்டு, நாடகம் | கண்டு, கன்று, கற்று, பார்த்து, கால்கள், பந்து, கொள்வது, புகழ்வது | கண், அவன், பார், கால், கொள், புகழ் |

**8. லகர ளகர விதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

(i) வேற்றுமைப்புணர்ச்சியில் லகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் லகரம் றகரமாய்த் திரிவதுண்டு.

எ.கா: கல் + சிலை = கற்சிலை
கடல் + கரை = கடற்கரை

(ii) லகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் லகரம் னகரமாய்த் திரிவதுண்டு.

எ.கா: பல் + முகம் = பன்முகம்

(iii) ளகரத்தைத் தொடர்ந்து வல்லினம் வரின் ளகரம் டகரமாய்த் திரிவதுண்டு.

எ.கா: மக்கள் + பேறு = மக்கட்பேறு

(iv) ளகரத்தைத் தொடர்ந்து மெல்லினம் வரின் ளகரம் ணகரமாய்த் திரிவதுண்டு.

எ.கா: நாள் + மீன் = நாண்மீன்

(v) வருமொழி தகரமாயின் லகரம் றகரமாக மாறுவதோடு தகரமும் றகரமாக மாறும்.

எ.கா: சொல் + துணை = சொற்றுணை

(vi) வருமொழி நகரமாயின் லகரம் னகரமாக மாறுவதோடு நகரமும் னகரமாக மாறும்.

எ.கா: பல் + நூல் = பன்னூல்

(vii) அல்வழியில், தனிக்குறிலடுத்த லகரம் தகரம் வரும்போது ஆய்தமாக மாறும். தகரமும் றகரமாகும்.

எ.கா: அல் + திணை = அஃறிணை
பல் + துளி = பஃறுளி





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

**9. பொருள் வேற்றுமை அணி சான்றுடன் விளக்குக.**

இருவேறு பொருள்களுக்கிடையே ஒற்றுமையை முதலில் கூறிப் பின் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை அணி எனப்படும்.

**சான்று :**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் – ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்!

**பாடலின் பொருள் :**

மக்களால் போற்றப்பட்டு, உயர்ந்த மலைகளுக்கு இடையே தோன்றி, கடலால் சூழப்பட்ட உலகத்தின் புற இருளை அகற்றுவது ஒன்று. பொதிகை மலையில் தோன்றி, சான்றோரால் தொழப்பட்டு, மக்களின் அறியாமை என்னும் அக இருளைப் போக்குவதோடு ஒப்புவமை இல்லாததுமாக இருப்பது இன்னொன்று. இருளைப் போக்கும் இவ்விரண்டில் ஒன்று ஒளிர்கின்ற கதிரவன் ; இன்னொன்று தனக்கு நிகரில்லாத தமிழ்.

**அணி விளக்கம் :**

தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள பயன் சார்ந்த ஒற்றுமையை முதலில் கூறி அவற்றுள் தமிழ் தன்னேரிலாதது என்ற தன்மையைப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை அணி ஆயிற்று. இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

☆ ☆ ☆




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# இயல் 2

இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# பெய்யெனப் பெய்யும் மழை

பாடப் பகுதி

| | |
|---|---|
| உரைநடை உலகம் | பெருமழைக்காலம் |
| கவிதைப் பேழை (செய்யுள்) | பிறகொரு நாள் கோடை – அய்யப்ப மாதவன்<br>நெடுநல்வாடை – நக்கீரர் |
| விரிவானம் (துணைப்பாடம்) | முதல்கல் – உத்தமசோழன் |
| இனிக்கும் இலக்கணம் (இலக்கணம்) | நால்வகைப் பொருத்தங்கள் |



## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

**1. பொருத்துக.**

அ) குரங்குகள் – 1) கன்றுகளைத் தவிர்த்தன
ஆ) பசுக்கள் – 2) மரங்களிலிருந்து வீழ்ந்தன
இ) பறவைகள் – 3) குளிரால் நடுங்கின
ஈ) விலங்குகள் – 4) மேய்ச்சலை மறந்தன

அ) 1, 3, 4, 2 ஆ) 3, 1, 4, 2
இ) 3, 2, 1, 4 ஈ) 2, 1, 3, 4

[விடை: ★ சரியான விடை : 3, 1, 2, 4]

**2. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்ப மாதவன் குறிப்பிடுவது**

அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
இ) மழைத் துளிகள் ஈ) நீர்நிலைகள்

[விடை: இ) மழைத் துளிகள்]



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**3. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்**

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்

[விடை: ஆ) மணல் அள்ளுதல்]

**4. பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு.**

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

[விடை: ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]

**5. உலக நாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது**

அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது

ஆ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

இ) காலநிலை மாறுபடுகிறது

ஈ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது [விடை: அ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது]

## குறுவினா

**1. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத் தொடர் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?**

'மரம் வளர்ப்போம், நலம் பெறுவோம்' என்பது இந்நாட்டின் இன்றைய தேவைகளுள் ஒன்றாகும். வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்பது அன்றைய வாசகம், ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது. மரங்கள் காற்றினைத் தூய்மை செய்கின்றன. மேலும் நிழல் தருகின்றன.

நாம் நமக்காக மட்டும் சிந்திப்பதை நிறுத்திவிட்டு உலக நலனையும், எதிர்காலச் சந்ததிகளின் தேவையையும் சேர்த்து சிந்திக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். "மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்" இது ஒவ்வொருவர் மனதிலும் ரீங்காரமிட வேண்டிய சொல்லாகும். மரங்கள் இயற்கையின் கொடை. இதை நாம் அழிக்க கூடாது. மாறாக அதைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை ஆகும்.

**2. இனநிரை - பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.**

இனநிரை – இனம் + நிரை

விதி : மவ்வீறு ஒற்றழிந்து உயீறிறு ஒப்பவும் – இனநிரை

**3. மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான் - இரு தொடர்களாக்குக.**

(i) தன் பேராசை காரணமாக மனிதன் இயற்கை வளங்கை சேதப்படுத்தினான்.

(ii) இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்தியதன் விளைவை இன்று சந்தித்துக் கொண்டிருக்கிறான்.

**4. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.**

மழைக்காலத்தில் வெட்ட வெளியில் பரவியுள்ள தூசுகள் மறைந்து விடுகிறது. மழை பெய்து நின்றவுடன் வரும் சூரிய ஒளியானது வெண்மையாகத் தோன்றுகிறது. அதனால் நகரம் பட்டை தீட்டிய வெள்ளை நகரமாகத் தெரிகிறது.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## சிறுவினா

**1. 'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி, 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.**

(i) நீர்நிலைகளில் உள்ள நீரானது சூரியனின் வரவால் ஈர்க்கப்படுகிறது. இதனையே சூரியன் தன் உதடுகளைக் குவித்து நீரை உறிஞ்சுகிறது எனப் பாடியுள்ளார் கவிஞர்.

(ii) 'மூங்கில் இலைமேல் தூங்கும் பனிநீரே' 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்று நாட்டுப்புறப்பாடல் கூறுகிறது.

(iii) இப்பாடலடியில் மூங்கில் இலையின் நுனியில் பனித்துளிகள் இருக்கின்றன. அவை எல்லாம் சூரியனின் கதிர்கள் வெளிப்பட்டதும் நீராவியாக மாற்றம் பெறுகிறது என்பதை இரு பாடல்களும் உணர்த்துகிறது.

**2. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

(i) தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய கோவலர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.

(ii) பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றினர். இவ்வாறாக வாடைக் காலத்தில் கோவலர்கள் பாதுகாப்பைத் தேடிக் கொண்டனர்.

**3. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

**மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் :**

(i) வெள்ள அபாயம் வரும் முன் வீட்டில் உள்ள மதிப்புமிக்க பொருட்களை பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

(ii) மின் இணைப்புகளைத் துண்டித்து வைக்க வேண்டும்.

(iii) வீட்டில் தீ அணைப்புக் கருவிகளை வைத்திருக்க வேண்டும். மேலும் வீட்டில் உள்ள எரிவாயு இணைப்புகளைத் துண்டித்து வைக்க வேண்டும்.

(iv) குடும்ப நபர்கள் அனைவருக்கும் வெளி ஊரில் உள்ள நண்பர் ஒருவரின் தொடர்பு முகவரி தெரிந்து இருக்க வேண்டும்.

(v) அவசரகால தேவைக்காக வீட்டில் போதுமான அளவு அத்தியாவசிய பொருட்களைச் சேமித்து வைக்க வேண்டும்.

(vi) அவசர சிகிச்சைப் பெட்டி ஒன்று, மருந்துகள், தேவையான துணிகள், பூச்சி விரட்டிகள், கொசுவலைகள் ஆகியவற்றைத் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

**4. பேரிடர் மேலாண்மை ஆணையம் - விளக்கம் தருக.**

(i) நடுவண் அரசு 2005-ஆம் ஆண்டு டிசம்பர் 23 அன்று தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை அமைத்தது.

(ii) புயல், வெள்ளம், நிலநடுக்கம், வறட்சி, சுனாமி, நிலச்சரிவு, தீ விபத்து, சூறாவளி, பனிப்புயல், வேதி விபத்துகள் முதலான பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு அமைப்புகளை ஒருங்கிணைத்துச் செயலாற்ற இந்த ஆணையம் உதவுகிறது. இதற்காகப் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

(iii) மாநிலம், மாவட்டம், ஊராட்சி, சிற்றூராட்சி என அனைத்து நிலைகளிலும் குழுக்கள் அமைத்துப் பேரிடர் காலங்களில் செயலாற்ற, பேரிடர் மேலாண்மை ஆணையம் வழிவகை செய்துள்ளது.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## நெடுவினா

**1. 'நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து' என்னும் தலைப்பில் சுற்றுச்சூழல் ஆர்வலர் பசுமைதாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடல் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**சந்தீப்** : ஐயா, வணக்கம். உங்களைப் பார்த்ததில் மிக்க மகிழ்ச்சி.

**பசுமைதாசனார்** : சந்தீப் ! வா ! வா ! அன்பு மாணவனே தற்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

**சந்தீப்** : ஐயா நான் தற்பொழுது மருத்துவத் துறையில் பணியாற்றி வருகிறேன்.

**பசுமைதாசனார்** : எதற்காக என்னை நாடி வந்தாய் ஏதேனும் ஐயங்கள் உள்ளனவா?

**சந்தீப்** : ஆம் ஐயா, நெகிழி என்றால் என்ன? சற்று விளக்குங்கள்

**பசுமைதாசனார்** : சரியாக கேட்டாய். நெகிழி அல்லது பிளாஸ்டிக் (Plastic) என்பது ஒரு பொருள். ஏதாவது ஒரு நிலையில் இருந்து பின்னர் இறுகி திட நிலையை அடைவதைக் குறிக்கும் சொல் ஆகும். பிளாஸ்டிக்கோஸ் என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து பிளாஸ்டிக் என்ற சொல் உருவானது. நெகிழி என்னும் பொருளானது பிசைவுகொள்ளும் பொருள் ஆகும். பிசைவு கொள்ளும் பொருட்கள் நெகிழி பொருட்கள் எனப்படும்.

**சந்தீப்** : ஐயா, நம் ஊர்களில் எங்கு பார்த்தாலும் நெகிழியைப் பயன்படுத்துகிறார்களே அதனால் தீமைகள் ஏற்பட்டு மக்கள் துன்பப்பட மாட்டார்களா?

**பசுமைதாசனார்** : சந்தீப் கட்டாயம் துன்பப்படுவார்கள். நெகிழியை பயன்படுத்துவதால் என்னென்ன தீமைகள் ஏற்படுகின்றன என்பதை பட்டியலிடுகின்றேன் கேள். கால்நடைகள், வனவிலங்குகள் போன்றவை உணவுடன் பிளாஸ்டிக் குப்பையை உட்கொள்வதால் உணவுக்குழாய் அடைப்பாட்டினால் துன்புறவும், மரணமடையவும் செய்கின்றன. வீட்டிலிருந்து தூக்கியெறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மண்ணின் தன்மையைப் பாதிக்கிறது. நெகிழி குடி தண்ணீர் பாட்டில்கள், குளிர்பான பாட்டில்கள் போன்றவை சாக்கடைகளை அடைத்து கொண்டு பல இன்னல்களை ஏற்படுத்துகின்றன. நம் அன்றாட வாழ்வில் தூக்கியெறியப்படும் பிரிக்காத குப்பைகளினால் கொசுக்களால் பரவும் நோய்கள் உருவாகின்றன. புரிந்ததா? இப்படி நெகிழியின் தீமைகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

**சந்தீப்** : இவ்வளவுதானா? இன்னும் நெகிழியின் தீமைகள் உள்ளனவா?

**பசுமைதாசனார்** : நெகிழியை நாள்தோறும் பயன்படுத்தி சுற்றுச்சூழலை பாதிப்படையச் செய்கின்றனர். நம் மக்கள் மேலும் நெகிழியைப் பயன்படுத்துவதால், பல்வேறு நோய்களும் பரவுகின்றன.

**சந்தீப்** : ஐயா கேன்சர் போன்ற வியாதியை உருவாக்கும் தன்மையை நெகிழி கொண்டுள்ளதா?

**பசுமைதாசனார்** : ஆம். தம்பி நெகிழியால் கேன்சர் நோயும் வரும்.

**சந்தீப்** : நெகிழி மாசுபாட்டைத் தடுக்கும் தீர்வுகளைக் கூறுங்கள் ஐயா.

**பசுமைதாசனார்** : நெகிழிப் பைகளுக்கு மாற்றாக சணல் மற்றும் துணி போன்ற எளிதில் மட்கக்கூடிய பொருட்களை பயன்படுத்தலாம். தண்ணீர் குடுவைகளுக்கு மண்பாண்டங்கள், உலோகங்கள் ஆகியவைகளால் செய்யப்பட்ட குடுவைகளை பயன்படுத்தலாம். வியாபாரிகள் நெகிழிக்கு மாற்றாகப் பொருட்களை பயன்படுத்த முயற்சி செய்யலாம். உணவு விடுதிகளில் மூங்கிலால் ஆன கோப்பைகள் மற்றும் தட்டுக்களைப் பயன்படுத்த அறிவுறுத்தலாம்.

**சந்தீப்** : ஐயா நான் கேள்விப்பட்டேன். தமிழக அரசும் நெகிழியைப் பயன்படுத்த தடை விதித்துள்ளது. என்கிறார்களே உண்மையா?

**பசுமைதாசனார்** : ஆம். சந்தீப் தமிழக அரசு-அரசு ஆணைகளைப் பிறப்பித்து நெகிழியைப் பயன்படுத்த தடை விதித்துள்ளது.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**சந்தீப்** : ஐயா இவ்வளவு நேரம் நெகிழியின் தீமைகள் மற்றும் அதை தடுப்பதற்கான வழிகளைக் கூறியமைக்கு மிக்க நன்றி ஐயா. முதலில் நானும் என்னைச் சார்ந்தவர்களும், இச்சமூகமும் நெகிழியைத் தவிர்க்கப் பாடுபடுவேன்.

**2. நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.**

**முன்னுரை :**

நெடுநல்வாடையில் கூதிர்காலத்து மழைப்பின்னணியையும், முல்லை நில மக்கள், பறவைகள், விலங்குகள் குளிரால் துன்பப்பட்டதையும் இக்கட்டுரையில் காண்போம்.

**புதிய மழை பொழிதல் :**

தான் தங்கியிருந்த மலையை வலப்பக்கமாகச் சூழ்ந்து எழுந்த மேகமானது உலகம் குளிருமாறு புதிய மழையைப் பொழிந்தது. தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலை உடைய ஆயர் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர். தாம் பழகிய நிலத்தை விட்டுப்பெயரும் நிலையைக் கண்டு வருத்தம் அடைந்தனர்.

**குளிர் மிகுதியால் முல்லை நில மக்களும் விலங்குகளும் அடைந்த துன்பங்கள் :**

பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடு ஏற்றிய போதிலும் அவர்கள் பற்கள் குளிரால் நடுங்கின. விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் குளிரால் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன. பசுக்கள் பாலூண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. மலையையே குளிரச் செய்வது போன்றிருந்தது அக்குளிர்கால நள்ளிரவு.

**முடிவுரை:**

ஐப்பசி, கார்த்திகை மாதங்களைக் குளிர் காலம் என்று அழைத்தனர். முல்லை நில மக்கள், பறவைகள், விலங்குகள் இவற்றின் வாழ்வில் மழையும் குளிரும் ஏற்படுத்தும் மாற்றத்தை இப்பாடல் மூலம் தெரிந்து கொண்டோம்.

**3. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்க.**

**முன்னுரை:**

உத்தமசோழன் எழுதிய ‘முதல்கல்’ கதை நமக்கு பாடமாக அமைந்துள்ளது. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை இக்கதையின் மூலம் அறிந்து கொள்வோம்.

**மருதனின் பொறுப்புணர்வு :**

வளவனாற்றின் வடகரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என்று விரிந்து கிடந்த வயல்வெளிகள். அடர்பச்சையில் தீவுபோல ஊர்க்குடியிருப்பும், மரங்களுக்கிடையில், வயல்வெளி எங்கும் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான பச்சை பிடிக்கத் தொடங்கியிருந்த இளம்பயிர், வெளிர்பச்சையில். இப்போதோ சற்றுப் பொறுத்தோ நீருக்குள் மூழ்கிவிடும் ஆபத்தில் இருந்தது.

அதோடு நில்லாமல் வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெற்று மேற்கு வடமேற்காக நகரக்கூடும். இதன் விளைவாக அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் பலத்த மழைபெய்யக்கூடும். இப்படி வாடிக்கையான செய்திகளைக் கேட்ட மருதன் ‘எந்த மழையின் உதவியில் நட்டார்களோ அதே மழையின் “அபரிமித அன்பினால் இப்போது பயிர் தெப்பலாடுகிறது. ஒருநாள் மூழ்கினால் போதுமே முழுவதும் அழுகிவிடுமே. மறுபடி புதிதாக நாற்றுவிட்டு புதிய சாகுபடிதான். அதற்கு யாரால் முடியும்?” என்ன செய்யலாம் என்று மருதனுக்கு ஆயிரம் யோசனைகள்.

ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்றுமைல் நீள வடிவாய்க்கால் முழுவதுமே சுவர் வைத்துத் தடுத்ததைப் போல் காடாய் மண்டிக் கிடக்கும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும். ஒரே நாளில் உபரி நீர் முழுவதும் வடிந்து விடுமே. பயிர்கள் மூழ்காமல் மொத்தக் கிராமமும் தப்பித்துக் கொள்ள வழி கண்டுபிடித்து விட்ட சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான் மருதன்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

தன் முயற்சியால் வடிவாய்க்காலில் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி மண்டிக் கிடந்த காட்டாமாணக்குச் செடிகளை 'சரக் சரக்' என்று அறுத்து மேலே எறிந்து கொண்டிருந்தான் மருதன். ஊர் மக்கள் செய்தி அறிந்து மதகை நோக்கி வரத் தொடங்கினார்கள்.

**முடிவுரை:**

ஊரில் யாருக்கும் இல்லாத அக்கறை மருதனுக்கு இருந்ததைப் பார்க்கும்போது, தன் பொறுப்புணர்வால் பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊர் மக்களை மாற்றிய மருதனின் பண்பு நலம் தெளிவாக தெரிகிறது. ஊர்க்கூடி தேர் இழுத்தால் அது தானாக சேர வேண்டிய இடத்தில் வந்து நிற்கும்.

**4. புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளர்களுக்குக் கடிதம் எழுதுக.**

03-03-2019
ஆவடி

**அனுப்புநர்**

ஊர்ப்பொதுமக்கள்,
நெ.1 பாரதியார் தெரு,
மாத்தூர் கிராமம்,
வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

**பெறுநர்**

உயர்திரு. மின்வாரியப் பொறியாளர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
மாமண்டூர் கிராமம்,
வெம்பாக்கம் வட்டம்
திருவண்ணாமலை மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** புயல் தாக்கத்தினால் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி விண்ணப்பித்தல்.

வணக்கம்.

எங்கள் கிராமத்தில் சுமார் இரண்டாயிரம் வீடுகள் உள்ளன. சமீபத்தில் கஜா புயல் தாக்கத்தினால் எங்கள் வீடுகளுக்கு அருகில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டும், மின் கம்பிகள் அறுந்தும் கிடக்கின்றன. கிராமமே இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. போதிய மின்வசதி இல்லாத காரணத்தால் நோயாளிகள், வயதானவர்கள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். தேர்வு நேரம் என்பதால் மின் துண்டிப்பினால் பள்ளி மாணவர்கள் தங்கள் தேர்வினை எதிர்கொள்ள மிகவும் சிரமப்படுகின்றனர். எனவே அருள்கூர்ந்து அறுந்து கிடக்கும் மின் கம்பிகளைச் சரி செய்து மீண்டும் மின்வசதி செய்து தர வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள
ஊர்ப் பொதுமக்கள்

உறைமேல் முகவரி

| |
|---|
| உயர்திரு மின்வாரியப் பொறியாளர் அவர்கள்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>மாமண்டூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம்<br>திருவண்ணாமலை மாவட்டம். |




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## மொழியை ஆள்வோம்

### சான்றோர் சித்திரம்



மாயூரம் வேதநாயகம் (1826–1889)

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக் கொடிய பஞ்சத்தைத் தாது வருடப் பஞ்சம் (Great Famine 1876-1878) என்று, இன்றும் நினைவு கூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபாலகிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான் நீதிபதி மாயூரம் வேதநாயகம். அவர், மொழிபெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர். மாயவரத்தின் நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றிய அவர், தமது சமகாலத் தமிழறிஞர்களான மகாவித்வான் மீனாட்சி சுந்தரனார், இராமலிங்க வள்ளலார், சுப்பிரமணிய தேசிகர் போன்றோரிடம் நட்புப் பாராட்டி நெருங்கியிருந்தார்; கி.பி. 1805 முதல் கி.பி. 1861ஆம் ஆண்டு வரை ஆங்கிலத்தில் இருந்த நீதிமன்றத் தீர்ப்புகளை முதன்முதலில் தமிழில் மொழிபெயர்த்து 'சித்தாந்த சங்கிரகம்' என்ற நூலாக வெளியிட்டார்; மேலும் பெண்மதி மாலை, திருவருள் அந்தாதி, சர்வ சமய சமரசக் கீர்த்தனை, சுகுண சுந்தரி முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இசையிலும் வீணை வாசிப்பதிலும் வல்லவராகத் திகழ்ந்த இவர், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கீர்த்தனைகளை இயற்றியிருக்கிறார்; வடமொழி, பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்றறிந்திருந்தார். அவர், பெண்கல்விக்குக் குரல் கொடுத்த மிக முக்கிய ஆளுமையாக அறியப்படுகிறார். அவருடைய மொழியாட்சிக்குச் சான்றாக, பிரதாப முதலியார் சரித்திரத்திலிருந்து ஒரு பத்தி:

"கல்வி விஷயத்தைப் பற்றி உன் பாலன் சொல்வதைக் கேள்" என்று என் பிதா ஆக்ஞாபித்தார். உடனே என் தாயார் என் முகத்தைப் பார்த்தாள். நான் முன் சொன்னபடி என் பாட்டியாரிடத்திலே கற்றுக்கொண்ட பாடத்தை என் தாயாருக்குச் சொன்னேன். அதைக் கேட்டவுடனே என் தாயாருக்கு முகம் மாறிவிட்டது. பிறகு சற்று நேரம் பொறுத்து, என் தாயார் என்னை நோக்கி, "என் கண்மணியே, நீ சொல்வது எள்ளளவுஞ் சரியல்ல. கல்வி என்கிற பிரசக்தியே இல்லாதவர்களான சாமானிய பாமர ஜனங்களைப் பார். அவர்களுடைய செய்கைகளுக்கும் மிருகங்களுடைய செய்கைகளுக்கும் என்ன பேதமிருக்கிறது? நமக்கு முகக் கண்ணிருந்தும் சூரியப் பிரகாசம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?" என்றார்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





## மொழிபெயர்ப்புப் பகுதியைப் படித்து, இருபது ஆங்கிலச் சொற்களையும் அதன் தமிழாக்கத்தையும் எடுத்து எழுதுக

| | |
|---|---|
| In 1977, shocked at the environmental devastation caused by deforestation in her beloved Kenya, Wangari Mathai founded the Green Belt Movement. For thirty years, the movement has enabled many women to plant trees in their regions providing them with food, fuel and halting soil erosion and desertification. She used the movement to enlighten the people on the fruits of representative democracy. This led Kenya to Kenya's first fully democratic elections in a generation. In the election, Mathai was elected to the Parliament and made a Minister of environment. She was conferred a Nobel Prize in 2004 because of her outstanding success in guiding Kenyan women to plant more than thirty million trees. She has transformend the lives of tens of thousands of women through sustainable social forestry schemes. | 1977ஆம் ஆண்டில் தனது உயிரினும் இனிய கென்யா நாட்டில் காடுகள் அழிக்கப்பட்டதால் ஏற்பட்ட பேரழிவு கண்டு மனம் வெதும்பி **வங்காரி மத்தாய்** பசுமை வளாக இயக்கத்தைத் தோற்றுவித்தார். அதைத் தொடர்ந்து முப்பது ஆண்டுகள், இந்த இயக்கத்தால் பல ஆப்பிரிக்கப் பெண்கள் தமது பகுதிகளில் மரங்களை நட்டு, அதன் வழியாகத் தங்களுக்குத் தேவையான உணவையும் எரிபொருளையும் தாமே ஈட்டியதோடு நில்லாமல் ஆப்பிரிக்காவில் நிலவிய மண் அரிப்பால் நிலம் பாலைவனமாவதையும் தடுத்து நிறுத்தினர். அவர் இந்த இயக்கத்தின் வழியாக மக்களாட்சியின் பயன்களை அறியச் செய்தார். இது அத்தலைமுறையினர் அனைவருக்கும் முதல்முறையாகத் தேர்தலில் பங்கேற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இத்தேர்தலில் வங்காரி மத்தாய் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டுப் பிறகு சுற்றுச்சூழல் அமைச்சரானார். கென்யப் பெண்களுக்கு வழிகாட்டி, மூன்று கோடி மரங்களை நட்டு வளர்த்ததால் அவரது தன்னலமற்ற பணியைப் பாராட்டி, 2004ஆம் ஆண்டு வங்காரி மத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. நிலையான வளர்ச்சியை உறுதி செய்யும் சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார். |

எ.கா. Green Belt Movement – பசுமை வளாக இயக்கம்

| | ஆங்கிலச் சொல் | தமிழ்ச் சொல் | | ஆங்கிலச் சொல் | தமிழ்ச் சொல் |
|---|---|---|---|---|---|
| 1. | Environmental Devastation | சுற்றுச்சூழல் பேரழிவு | 11. | Generation | தலைமுறை |
| 2. | Deforestation | காடுகள் அழிக்கப்படுதல் | 12. | Parliament | பாராளுமன்றம் |
| 3. | Trees | மரங்கள் | 13. | Minister of Environment | சுற்றுச்சூழல் அமைச்சர் |
| 4. | Food | உணவு | 14. | Sustainable | நிலையான |
| 5. | Fuel | எரிபொருள் | 15. | Representative | பிரதிநிதி |
| 6. | Soil Erosion | மண் அரிப்பு ஏற்படுதல் | 16. | Thirty million | முப்பது மில்லியன் |
| 7. | Regions | பகுதிகள் | 17. | Movement | இயக்கம் |
| 8. | Fruits | பழங்கள் | 18. | Enlighten the people | மக்களுக்கு தெளிவுப்படுத்தல் |
| 9. | Democracy | மக்களாட்சி | 19. | Shocked | அதிர்ச்சி |
| 10. | Election | தேர்தல் | 20. | Social Forestry Schemes | சமூக வன திட்டங்கள் |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

## மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக

**எ.கா.** விலை, விளை, விழை

கார் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால் தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது.

**1. தலை, தளை, தழை**

ஆடு மாடுகள் **தளை**யில்(வயல்) இருந்த இலை**தழை**களை மேய்ந்ததைக் கண்ட சிறுவன் சிறுகல்லை எடுத்து ஆட்டின் **தலை**யில் படுமாறு அடித்தான்.

**2. கலை, களை, கழை**

**கழை**த் தோட்டத்தில் **களை**யெடுக்கும் பெண்கள் அங்கிருந்த **கலை**யைக் கண்டு வியப்புடன் பார்த்தனர்.

**3. அலை, அளை, அழை**

பலமான இடி மழையால் **அளை** சிதைவுற்று உள்ளிருந்த பாம்புகள் செல்லுமிடமறியாது **அலை**ந்து திரிவதைப் பார்த்துக் கொண்டிருந்த குழந்தையைத் தாய் பதற்றத்துடன் **அழை**த்தாள்.

## இலக்கிய நயம் பாராட்டுக

வெட்டியடிக்குது மின்னல் – கடல்
  வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம் – கூ
  கூவென்று விண்ணைக் குடையுது காற்று
சட்டச்சட சட்டச்சட டட்டா – என்று
  தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்
எட்டுத்திசையும் இடிய – மழை
  எங்ஙனம் வந்ததடா தம்பி வீரா!

– பாரதியார்

**திரண்ட கருத்து :**

வானை வெட்டியது போல் மின்னல் மின்னுகிறது. கடல் வீரம் மிக்க அலைகளைக் கொண்டு வானையிடிக்கிறது. மேகக்கூட்டங்கள் கொட்டியிடிக்கிறது. காற்று கூ கூ வென்று வானத்தைக் குடைகிறது. வானம் சட்டச்சட சட்டச்சட டட்டா என்ற தாளங்களை எழுப்பிக் கனைக்கிறது. எட்டுத் திசைகளிலும் இடிக்கின்றது. இந்நிகழ்வுகளுக்குப் பிறகு மழை வந்தது எனப் பாரதியார் பாடுகிறார்.

**மையக் கருத்து :**

மழை வரும்போது வானில் நிகழும் அழகான நிகழ்வுகளைக் கண்முன் காட்டுவது போல பாடல் அமைந்துள்ளது.

| | | |
|---|---|---|
| **மோனைத் தொடை** : | வெட்டி | – வீர |
| | கொட்டி | – கூவென்று |
| | எட்டுத்திசை | – எங்ஙனம் |
| **எதுகைத் தொடை** : | வெட்டி | – கொட்டி |
| | சட்டச் | – எட்டுத்திசை |

பெய்யெனப் பெய்யும் மழை



www.surabooks.com

**சொல்நயம்** : கூ கூ வென்று, சட்டச்சட, இடிக்குது குடையுது, கனைக்குது போன்ற ஓசையை உணர்த்தும் சொற்களைக் கையாண்டுள்ளமை பாடலுக்கு அழகூட்டுகிறது.

**அணிநயம்** : உயர்வு நவிற்சி அணி அமைந்துள்ளது. எ.கா கடல் வீரத் திரை கொண்டு விண்ணையிடிக்குது.

## கீழ்க்காணும் அழைப்பிதழைப் பத்தியாக மாற்றுக

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம்

**நாள் :** அக்டோபர் 2 **நேரம் :** காலை 10 மணி

**இடம் :** கலைவாணர் அரங்கம், சென்னை.

**நிகழ்ச்சி நிரல்**

**தமிழ்த்தாய் வாழ்த்து**

**வரவேற்புரை :** திருமதி அரசி, செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளர்

**முன்னிலை :** திரு. அமுதன், இயற்கை வேளாண் உழவர்

**தலைமையுரை :** திரு. இமயவரம்பன், பேரிடர் மேலாண்மை இயக்குநர்

**கருத்தரங்கத் தலைப்புகள்**

- இயற்கை சீற்றங்களும் – பருவகால மாற்றங்களும் – முனைவர் செங்குட்டுவன்
- பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும் – திரு. முகிலன்
- நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல் – திருமதி. பாத்திமா
- பேரிடர் காலங்களில் செய்யக் கூடியதும் செய்யக் கூடாததும் – திரு. வின்சென்ட்

**நன்றியுரை :** பர்வீன், பசுமைப்படை மாணவர் தலைவர்

**நாட்டுப்பண்**

**விடை :**

பேரிடர் மேலாண்மைக் கருத்தரங்கம் அக்டோபர் மாதம் 2–ஆம் நாள், காலை பத்து மணிக்குச் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. தமிழ்த்தாய் வாழ்த்துடன் கருத்தரங்கம் தொடங்கும். செஞ்சிலுவைச் சங்க ஒருங்கிணைப்பாளரான திருமதி. அரசி அவர்கள் வரவேற்புரை வழங்குவார். இயற்கை வேளாண்மை உழவரான திரு. அமுதன் அவர்கள் முன்னிலை வகிப்பார். பேரிடர் மேலாண்மை இயக்குநர் திரு. இமயவரம்பன் அவர்கள் தலைமையுரையாற்றுவார்.

'இயற்கை சீற்றங்களும் – பருவகால மாற்றங்களும்' என்ற தலைப்பில் முனைவர் செங்குட்டுவன் அவர்களும், 'பேரிடர்களை எதிர்கொள்ளுதலும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் திரு. முகிலன் அவர்களும், 'நீர்வழிப் பாதைகளைப் பாதுகாத்தல்' என்ற தலைப்பில் திருமதி. பாத்திமா அவர்களும், 'பேரிடர் காலங்களில் செய்யக் கூடியதும் செய்யக் கூடாததும்' என்ற தலைப்பில் திரு. வின்சென்ட் அவர்களும் உரையாற்றவிருக்கிறார்கள். பசுமைப் படை மாணவர் தலைவர் பர்வீன் நன்றியுரையாற்றுவார். நாட்டுப்பண்ணுடன் விழா நிறைவுறும்.



www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


# மொழியோடு விளையாடு

## எண்ணங்களை எழுத்தாக்குக.



**விடை:**

பூமிப்பந்து மெழுகாய் உருகுகிறது
கண்டும் காணாமல் மக்கள் கூட்டம்
மரங்களை வளர்த்தால் மழைபெய்யும்
மரங்களை அழித்தால் பூமிகாயும்
அறிவியல் சாதனங்களைக் கண்டான்
அறியாமை இருளில் மூழ்கினான்.
நெகிழியினால் மண்வளத்தைக் கெடுத்தான்
ஓசோன் படலத்தின் பாதிப்பை அறிந்தான்
அறிந்தும் ஏனோ உறங்குகிறான்?

---

அழகானது
அனைவரையும்
வாழ வைக்கக் கூடியது
ஐம்பூதங்களையும்
ஒருங்கே கொண்டது
இந்த உலகம்.
உலகம்
உருண்டையானதுதான்
சுற்றுகிறது

சூரியனை,
தடுமாற்றமில்லாமல்
பார்த்துக்கொள் – தடுமாறினால்
மண்ணுமில்லை
மக்களோடு சேர்ந்த
எவ்வுயிருமில்லை.
உலகம்
அழகானது
அமைதியானது. – கண்ணன்

## புதிர்க்கேற்ற விடையை அறிக

அ) அடைமழை பெய்த அடுத்த நாள்
படைப்படையாய் வந்ததாம்
பரங்கி நாட்டு விமானம்
எதிரி சுடாமலேயே
இறகொடிந்து இறந்ததாம் – என்ன? **[விடை: ஈசல்]**

ஆ) தண்ணீரும் மழையும் இல்லாமல்
பயிர் பச்சையாய் இருக்கிறது
பாக்கு வெற்றிலை போடாமல்
வாய் சிவப்பாய் இருக்கிறது? – என்ன? **[விடை: பச்சைக்கிளி]**




orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## கடிதம் எழுதுக

மழை பெய்யும் போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு உங்கள் பள்ளி தலையாசிரியருக்குக் கடிதம் எழுதுக.

**விடை :**

வேலூர்
19-06-2019

**விடுநர்**

கவின்குமார்
பன்னிரண்டாம் வகுப்பு
அரசு மேல்நிலைப் பள்ளி,
வேலூர்.

**பெறுநர்**

உயர்திரு. தலைமையாசிரியர்,
அரசு மேல்நிலைப் பள்ளி,
வேலூர்

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** மழைக்காலத்திற்கான விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்துதல் தொடர்பாக...

வணக்கம். நான் இப்பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு 'அ' பிரிவில் படிக்கின்றேன். இப்பள்ளியின் மாணவர் தலைவன். நாம் புதிய கல்வியாண்டில் அடி எடுத்து வைத்துள்ளோம். இனி வருவது மழைக்காலம். மழையின் அளவைப் பார்த்து பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. மாணவர்களாகிய நாங்கள் வீட்டிலும் வெளியிலும் எவ்வாறு முன்னெச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்பதை அறியவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். மழைக்காலத்தில் மாணவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஒவ்வொரு மாணவனும் அறிந்திருக்க வேண்டும்.

மழை பெய்யும்போது, மின்கம்பங்கள், மரங்கள், குளம், குட்டை, ஏரி, ஆறு ஆகியனவற்றிற்கு அருகில் செல்லாதிருத்தல், வெளியில் செல்லும்போது காலணி அணிதல், கொதிக்க வைத்த நீரையே பருகுதல், வானிலை அறிக்கைகளைப் பின்பற்றுதல், அரசு எடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்தல் போன்ற மழைக்காலப் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து வகுப்பு மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்தால் அனைவரும் பயன் பெறுவோம் என்பதைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்நிகழ்ச்சியைப் பார்க்கும் மாணவர்கள் தங்கள் வீட்டில் உள்ளவர்களுக்கும் அக்கம்பக்கம் உள்ளவர்களுக்கும் கூறுவதன் மூலம் பலரும் பயன்பெறுவர். உங்கள் வழிநடத்துதலின்படி இந்நிகழ்வை மற்ற ஆசிரியர்களுடன் கலந்து பேசி திட்டமிட்டு, நிகழ்ச்சியை என் சிரமேற்கொண்டு நடத்துகிறேன்.

நன்றி!

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள
கவின்குமார்





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## செய்து கற்போம்

**1. உங்கள் பகுதியில் புழங்கும் இருபது சொற்களைக் கொண்டு வட்டார வழக்குச் சொல் தொகுப்பு ஒன்றை உருவாக்குக.**

| வட்டார சொற்கள் | தமிழ்ச் சொல் | வட்டார சொற்கள் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| வெஞ்சனம் | துணை உணவு | எகனக்கி மொகன பேசுறான் | எதுகை மோனை பேசுகிறான். |
| லந்து | கிண்டல் | வெஞ்சாமரம் | துடைப்பம் |
| சீமைத்தண்ணி | மண் எண்ணெய் | நெக்கிப் பிட்டான் | நையப்புடைத்தான் |
| கூறு கெட்டவன் | பகுத்தறிவு கெட்டவன் | சீர் செனத்தி | பட்டியலிட்ட சீர்ப்பொருள் |
| பைய | மெதுவாக | செத்த நேரம் | சிறிது நேரம் |
| உசுப்பு | எழுப்பு | ஆணம் | குழம்பு |
| ஒசக்க | மேலே | அங்குட்டு | அங்கே |
| இங்குட்டு | இங்கே | கொல்லை | வீட்டின் பின்பக்கம் |
| குறுக்கு | இடுப்பு | மச்சிவீடு | ஆடம்பரமான வீடு |
| அலப்பறை | அலட்டல் | ரவைக்கு | இரவுக்கு |

## நிற்க அதற்குத் தக

**அது ஒரு மழைக்காலம், அதிகளவு மழையினால் வெள்ளம் வரக்கூடிய நிலை குறித்து அரசு அறிவிப்பு வெளியாகிறது. அரசின் துண்டறிக்கை உங்கள் கைகளில்...**

| அ) எச்சரிக்கை நடவடிக்கைகள் | ஆ) சுகாதார நடவடிக்கைகள் |
|---|---|
| வெள்ள நீருக்கு அருகே வரவோ, வெள்ளநீரில் விளையாடவோ கூடாது. | கொதிக்க வைத்த நீரையே அருந்துங்கள். |
| ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்கவும். | மூடி வைக்கப்பட்டுள்ள, சமைத்த சூடான உணவுகளையே உண்ணுங்கள். |
| சாக்கடை, நீர் ஓட அமைக்கப்பட்டுள்ள வடிகால்கள், வாய்க்கால்கள், கழிவுநீர்த் தொட்டிகள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். | சமைத்த உணவு, சமைக்கத் தேவையில்லாத உணவுகளையே உட்கொள்ளுங்கள். |
| வெள்ளநீரில் பாம்புகள் மிதந்து வரும் அபாயம் இருப்பதால், முன்னெச்சரிக்கையாய்க் கைகளில் கொம்புடன்(தடி) இருங்கள். | வயிற்றுப்போக்கு இருந்தால், அரிசிக்கஞ்சி, இளநீர், பால் கலக்காத தேநீர், மோர் பருகலாம். |
| உங்கள் வீட்டில் உள்ள கழிப்பிடத் துளை மற்றும் குளியலறைத் துளை மீது மணல் மூட்டைகளை அடுக்கி வைத்து, தெருவில் ஓடும் வெள்ள நீர் மற்றும் கழிவுநீர் வீட்டிற்குள் புகாதபடி செய்யுங்கள். | அங்கன்வாடி, சுகாதாரப் பணியாளர்களை அணுகி உப்பு, சர்க்கரைக் கரைசல் பொட்டலங்களை வாங்கி அதைக் குடிக்கலாம். |
| அறுந்த மின்கம்பிகள் மீது காலை வைக்காதீர்கள், மின் சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுதுபட்டிருந்தால் அவற்றைப் பயன்படுத்தாதீர்கள். ஏனெனில் அவற்றின் வழியாக மின்சாரம் தாக்கி மரணம் ஏற்பட வாய்ப்புள்ளது. | சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாக்க பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புத் தூளைப் பயன்படுத்தவும். |



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**குறிப்புகளைப் படித்த நீங்கள் உங்களைச் சுற்றி இருப்பவர்களுக்கு எவ்வாறு உதவுவீர்கள்?**

(i) முதலில் என் நண்பர்கள் சிலருடன் சென்று சுற்றுவட்டாரப் பகுதியில் உள்ள வீடுகளில் வசிப்பவர்களிடம் துண்டறிக்கையைக் கொடுப்பேன்.

(ii) மின் கம்பிகள் அறுந்து போனால் ஆபத்து என்பதால் மின்சார வாரிய ஊழியர்களிடம் சொல்லி மின்சாரத்தைத் துண்டிக்கச் செய்வேன்.

(iii) பள்ளமான அதாவது ஆறு, ஏரி போன்ற நீர்நிலைகளுக்கு அருகில் வாழ்பவர்களை வேறு பாதுகாப்பான இடத்திற்குச் செல்வதற்கு வழி செய்வேன்.

(iv) இது போன்று என்னால் எவ்வாறு உதவ இயலுமோ அவ்வாறு உதவுவேன்.

(v) துண்டறிக்கையில் உள்ள எச்சரிக்கை நடவடிக்கைகள், சுகாதார நடவடிக்கைகளில் உள்ளவற்றை மேற்கொள்வேன்.

## படிப்போம் பயன்படுத்துவோம் (தொடர்வண்டி நிலையம்)

| | | | |
|---|---|---|---|
| 1. Platform | - நடைமேடை | 2. Ticket Inspector | - பயணச்சீட்டு ஆய்வர் |
| 3. Train Track | - இருப்புப்பாதை | 4. Level Crossing | - இருப்புப்பாதையைக் கடக்குமிடம் |
| 5. Railway Signal | - தொடர்வண்டி வழிக்குறி | 6. Metro Train | - மாநகரத் தொடர்வண்டி |



## அறிவை விரிவு செய்

1. பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா.இராசமாணிக்கனார்
2. தமிழ்நடைக் கையேடு
3. சுற்றுச்சூழல் கல்வி - ப.ரவி
4. இயற்கைக்கு திரும்பும் பாதை - மசானா ஃபுகோகா
5. கருப்பு மலர்கள் - நா. காமராசன்
6. வானம் வசப்படும் - பிரபஞ்சன்

## கற்பவை கற்றபின்

### பெருமழைக்காலம்

1. **வெள்ளப் பேரழிவு குறித்த நாளிதழ்ச் செய்திகளைத் தொகுக்க.**

சென்னை, டிசம்பர் 5 புயல் காரணமாக சென்னையில் அடைமழை பெய்ந்து கொண்டிருக்கிறது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. 100 ஆண்டுகளில் இல்லாத அளவு ஏற்பட்ட மிகப்பெரிய இயற்கை பேரழிவு ஆகும். மழை நவம்பர் முதல் வாரத்தில் தொடங்கியது. இக்காலத்தில் பெய்த மழையின் காரணமாக சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. அடுத்தடுத்த மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இந்தப் பேரழிவின் விளைவாக சாலைகள் மற்றும் இரயில் தண்டவாளங்கள் சேதமடைந்தன.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

தமிழ்நாடு, புதுச்சேரி குறிப்பாக சென்னை கடுமையாக பாதிக்கப்பட்டது. 1000-க்கும் மேற்பட்டோர் உயிர் இழந்ததுடன் 18 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். போக்குவரத்துப் பாதிப்பு, மின்சாரம் துண்டிப்பு, தொலைத்தொடர்பு சேவை துண்டிப்பு அத்தியாவசிய பொருட்கள் கிடைக்காமல் மக்கள் அவதியுற்றனர்.

– தினத்தந்தி

திருவனந்தபுரம் மே-10, கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் மழையால் நகரமே வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை கொட்டித் தீர்த்து வருகிறது. இந்த மழையால் பல்வேறு மாவட்டங்கள் நீரில் மூழ்கி, வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. மழை மற்றும் நிலச்சரிவு போன்ற சம்பவங்களால் கேரளாவில் உயிரிழக்கும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

கேரளாவில் பெய்துள்ள கனமழை மற்றும் வெள்ளத்தில் 5 லட்சம் பேர் தங்களது இருப்பிடங்களை விட்டு பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். வெள்ளம், நிலச்சரிவு உள்ளிட்டவற்றில் சிக்கி இதுவரை 370பேர் உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

– தினகரன்

**2. ஜூன் 5, உலகச் சுற்றுச்சூழல் நாள். இந்நாளில் பள்ளியின் கூட்டத்தில் ஏற்க வேண்டிய உறுதிமொழியை உருவாக்குக.**

**உறுதிமொழி**

இயற்கை வளங்களை அழித்துக் கொண்டிருக்கும் நாம் சுற்றுச்சூழல் தினமான இன்று உறுதிமொழிகளை எடுப்போம். நான் இன்று முதல் கண்ட இடத்தில் குப்பைகளை வீசமாட்டேன். அருகில் குப்பைத்தொட்டி இல்லாவிட்டால் சிறிது நேரம் வைத்திருந்து குப்பைத் தொட்டிகளைத் தேடிச் சென்று குப்பையைப் போடுவேன். நாம் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பைகள் பூமியில் மட்காமல் இருக்கும் தன்மை உடையன. அதனால் இனி வரும் காலங்களில் இனி பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் பாட்டில்கள் போன்றவற்றை பயன்படுத்த மாட்டோம் எனவும் உறுதிமொழி ஏற்கிறேன். கார்பன் – டை – ஆக்ஸைடு வெளிப்படுத்தும் கார் டயர்களையோ, பிளாஸ்டிக் பொருட்களையோ பயன்படுத்த மாட்டேன், எரிக்கவும் மாட்டேன் எனவும் மரங்களை வெட்டுவதைத் தடுப்பேன். மக்களுக்கு மரங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பேன். மரங்களின் எண்ணிக்கை குறைய குறைய மழையின் அளவும் குறையும் என்பதை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் எடுத்துரைப்பேன். அனைத்து விலங்குகள் மற்றும் பறவைகளை அழிக்காமல் அவைகளின் மதிப்பை உணர்ந்து நடந்து கொள்வோம் என்று உலக சுற்றுச்சூழல் தினமான இன்று மனதார உறுதிமொழி எடுப்போம்.

## பிறகொரு நாள் கோடை

**1. 'மழை' தொடர்பான கவிதைகளைத் தொகுத்து இதழ் ஒன்று உருவாக்குக.**

| ஆனந்தம் | பிளாட்பாரம் |
|---|---|
| மழை எனக்கு பிடிக்கும்<br>மழைக்கும் என்னைப் பிடிக்கும்<br>நனையும்போது<br>என் வீட்டிலிருந்து வெளியே<br>பெய்யும் மழையை பிடிக்கும்போது<br>அளவில்லா ஆனந்தம்<br>மழைக்கும் எனக்கும். | மழை வேண்டி<br>மக்கள் வேண்டுகிறார்கள்<br>கடவுளிடம்<br>நானும்.<br>மழை பெய்தது<br>அலறி அடித்து ஓடுகிறேன்<br>என் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு<br>பள்ளிக்கூடத்திற்கு |



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## நெடுநல்வாடை

**1. தற்கால வாழ்க்கை முறையில் மழை, குளிர் காலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவது குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.**

**கருணாகரன்** : வணக்கம் சூர்யா.

**சூர்யா** : வணக்கம். கருணாகரன் எப்படி இருக்கிறாய்?

**கருணாகரன்** : நலமாக இருக்கிறேன்.

**சூர்யா** : மழை பெய்து கொண்டே இருக்கிறது.

**கருணாகரன்** : ஆமாம், மக்கள் யாரும் வேலைக்கு போக முடியல. காய்கறி கிடைக்கல, விலை அதிகமாயிடுச்சி.

**சூர்யா** : ஆமாம். கருணா, நீ சொல்வது உண்மைதான். எங்க வீட்டிலேயே கஞ்சி தான் குடிச்சேன்.

**கருணாகரன்** : சாலை முழுக்க தண்ணீர். வாகனம் ஓட்ட முடியல. இதனால் போக்குவரத்து நெரிசல். மக்களுடைய இயல்பு வாழ்க்கை பாதிக்கிறது.

**சூர்யா** : நானும் செய்தித்தாள்களிலும், தொலைகாட்சிகளிலும் பார்த்தேன். மக்களிடம் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

**கருணாகரன்** : நம் நாட்டில் தண்ணீர் சேமிக்க அணைகள் இல்லை. தண்ணீர் போக கால்வாய்கள் சரியாக இல்லை. இதனால்தான் மனிதனுடைய இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது. விடாமல் மழையும் பெய்கிறது.

**சூர்யா** : மழைக்காலங்களில் இப்படி என்றால் குளிர்காலங்களில் பனிமூட்டம் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு உள்ளது.

**கருணாகரன்** : குளிரால் மக்களுக்கு பல நோய்கள் வந்து இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுகிறது.

**சூர்யா** : கடுங்குளிரில் மக்கள் வெளியில் செல்ல முடியாமல் இருக்கிறார்கள். இதனால் வேலையில்லாமல் வருமானத்திற்கு வழியில்லாமல் இருக்கிறார்கள்.

**கருணாகரன்** : குளிர்காலத்தில் பயிர்கள் கருகியதால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. மழைக்காலங்களில் வெள்ளத்தில் பயிர்கள் அடித்துச் செல்லப்படுகின்றன. இதனால் வறட்சி ஏற்பட்டு வறுமையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைகிறது.

**சூர்யா** : நன்றாக கூறினாய். நன்றி, வணக்கம்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



## முதல்கல்

**1. உங்கள் இல்லத்தில் நடைபெறும் திருமண விழாவுக்கு வருகை தரும் விருந்தினர்களுக்கு மரக்கன்று ஒன்று தருவதாக முடிவு செய்துள்ளீர்கள். மரக்கன்று வழங்கும் நோக்கங்களையும் அதனைப் பயிரிடுவதால் ஏற்படும் பொது நன்மைகளையும் கொண்ட இருபக்கச் சிற்றேட்டை உருவாக்குக.**

| நோக்கங்கள் | நன்மைகள் |
|---|---|
| மரக்கன்றுகளை நட்டால் நாடு மிகவும் செழுமையாக இருக்கும். அழகாகவும் இருக்கும். மரங்கள் வெப்பத்தைத் தடுக்கும். குளிர்ந்த காற்றைத் தரும். | மரங்களால் நமக்கு பலவகையான மருத்துவத்துக்குத் தேவையான மருந்துகளும், பழங்களும் கிடைக்கும். |
| அனைத்து மக்களுக்கும் தூய்மையான காற்று கிடைக்க வேண்டும் என்பதே நோக்கம். | நமக்கு உணவுப் பஞ்சங்கள் வராமல் தடுக்கும். மிகவும் முக்கியமான ஒன்றான மழையைத் தரும். |
| அனைவருக்கும் அனைத்து விதமான பழங்களும் மருந்து பொருட்களுக்கும் கிடைக்க வகை செய்வதே ஆகும். | மனிதனுக்குத் தேவையான தூய்மையான காற்று ஆக்ஸிஜனைத் தருகின்றது. |

## நால்வகைப் பொருத்தங்கள்

**1. இடப்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது என்பதைப் பாடப் பகுதியிலிருந்து சான்று காட்டுக.**

(i) இடப்பாகுபாடு என்பது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும். பெயர்ச் சொற்களில் இடப்பாகுபாடு வெளிப்படாது. அவன், அவள், அவர், அது, அவை முதலான பதிலிடு பெயர்களிலும் வினைமுற்றுகளிலுமே வெளிப்படும்.

(ii) பேசுபவன், முன்னிருந்து கேட்பவன், பேசப்படுபவன் அல்லது பேசப்படும் பொருள் ஆகிய மூன்றும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என அழைக்கப்படும்.

(iii) தமிழில் தன்மையிலோ முன்னிலையிலோ ஒருமை பன்மை பாகுபாடு உண்டே தவிர, ஆண்பால், பெண்பால் பாகுபாடு இல்லை.

**சான்று :** நான் புத்தகம் கொடுத்தேன்.

என்னும் தொடரில் பேசியவர் ஒருவர் என்று கூற முடியுமே ஒழிய, ஆணா பெண்ணா என்று கூற முடியாது. முன்னிலையிலும் இவ்வாறே பால் பாகுபாட்டை அறிய முடியாது. தன்மை பன்மையில் **உளப்பாட்டுத் தன்மைப் பன்மை** எனவும், **உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை** எனவும் இருவகை உண்டு.

(iv) பேசுபவர் (தன்மை) முன்னிலையாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டு தன்மைப் பன்மை ஆகும்.

**சான்று :** நாம் முயற்சி செய்வோம் (உளப்பாட்டுத் தன்மைப் பன்மை). இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கிறது.

(v) பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை ஆகும்.

**சான்று :** நாங்கள் முயற்சி செய்வோம் (உளப்படுத்தாதத் தன்மைப் பன்மை). இடப்பாகுபாடு தொடர் அமைப்பிற்கு இன்றியமையாதது ஆகும்.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. தமிழில் திணைப்பாகுபாடு ................ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.**

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு

இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு [விடை: அ) பொருட்குறிப்பு]

**2. "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"
-இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்.......................**

அ) நன்னூல் ஆ) அகத்தியம்

இ) தொல்காப்பியம் ஈ) இலக்கண விளக்கம் [விடை: இ) தொல்காப்பியம்]

**3. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே .........**

அ) அஃறிணை, உயர்திணை

ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை

ஈ) விரவுத்திணை, உயர்திணை [விடை: ஆ) உயர்திணை, அஃறிணை]

**4. பொருத்தி விடை தேர்க.**

அ) அவன் அவள் அவர் - 1) உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2) உளப்பாட்டுத் தன்மைப்பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3) தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4) பதிலிடு பெயர்கள்

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1

இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2 [விடை: அ) 4, 1, 2, 3]

**5. மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உதவுவன யாவை?**

மொழியின் சொற்றொடர் அமைப்பை விளங்கிக் கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உதவுவன திணை, பால், எண், இடம் என்பனவாகும்.

**6. உயர்திணைப் பன்மைப்பெயர்கள், பன்மை விகுதி பெற்றுவருமாறு இரண்டு தொடர்களை எழுதுக.**

(i) இரண்டு மனிதர்கள் நேற்றிரவு வந்தனர்.

(ii) புலவர்கள் புத்தகங்களைக் கொடுத்தனர்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

## கூடுதல் வினாக்கள்

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக

1. உலகப்புவி நாள் ..................

அ) ஏப்ரல் -21 ஆ) ஏப்ரல் -22

இ) ஏப்ரல் -15 ஈ) ஏப்ரல் -16 [விடை: அ) ஏப்ரல் -21]

2. 2005 ஆம் ஆண்டு மும்பையில் ஒரே நாளில் .................. மழை பெய்தது

அ) 994 மி.மீ ஆ) 1025 மி.மீ

இ) 894 மி.மீ ஈ) 725 மி.மீ [விடை: அ) 994 மி.மீ]

3. 2010 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீர் மாநிலம் லே பகுதியில் ............... நிமிடங்களில் ............. மழையளவு பதிவானது

அ) 40,150 முதல் 250மி.மீ வரை ஆ) 30,150 முதல் 250 மி.மீ வரை

இ) 20, 160 முதல் 260 மி.மீ வரை ஈ) 10, 120 முதல் 220 மி.மீ வரை

[விடை: ஆ) 30,150 முதல் 250 மி.மீ வரை]

4. புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக்கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறியவர் ............

அ) டேவிட் கிங் ஆ) மாக்ஸ்வெல்

இ) கெப்ளர் ஈ) ஹென்றி பெக்குரல் [விடை: அ) டேவிட் கிங்]

5. ஆர்டிக் பகுதி, கடந்த முப்பது ஆண்டுகளில் ---- மைல்கள் உருகியுள்ளது.

அ) ஐந்து இலட்சம் சதுர ஆ) மூன்று இலட்சம் சதுர

இ) நான்கு இலட்சம் சதுர ஈ) இரண்டு இலட்சம் சதுர

[விடை: இ) நான்கு இலட்சம் சதுர]

6. பசுமைக்குடில் வாயுக்களில் பொருந்தாத ஒன்றைக் கண்டறி.

அ) மீத்தேன் ஆ) ஓசோன்

இ) நீர்வாயு ஈ) காற்று ஆற்றல் [விடை: ஈ) காற்று ஆற்றல்]

7. கார்பன் அற்ற ஆற்றல்களில் பொருந்தாததைக் கண்டறி.

அ) சூரிய ஆற்றல் ஆ) தாவர ஆற்றல்

இ) ஹைட்ரஜன் ஆற்றல் ஈ) நைட்ரஸ் ஆக்சைடு [விடை: ஈ) நைட்ரஸ் ஆக்சைடு]

8. காலநிலை மாற்றம் பற்றிய பணித்திட்ட பேரவை தொடங்கப்பட்ட ஆண்டு .......... தொடங்கப்பட்ட நகரம் ........

அ) 1992-ரியோ டி ஜெனிரோ ஆ) 1993-நியூயார்க்

இ) 1966-பிரிட்டன் ஈ) 1995-மும்பாய் [விடை: அ) 1992-ரியோ டி ஜெனிரோ]



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



9. .................. ஆண்டை இந்திய வானிலை ஆய்வுத்துறையினர் (கடந்த 110 ஆண்டுகளில்) மிகவும் வெப்பமான ஆண்டாக அறிவித்தனர்.

அ) 2009ஆம் ஆ) 2010ஆம்

இ) 2012ஆம் ஈ) 2006ஆம் [விடை: அ) 2009ஆம்]

10. தமிழக நிலப்பரப்பில் விடுதலைக்கு முன்பு ........................ நீர்நிலைகள் இருந்தன.

அ) முப்பதாயிரம் ஆ) ஐம்பதாயிரம்

இ) நாற்பதாயிரம் ஈ) பத்தாயிரம் [விடை: ஆ) ஐம்பதாயிரம்]

11. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் நிறுவப்பட்ட ஆண்டு

அ) 2005-டிசம்பர் 23

ஆ) 2006-டிசம்பர் 23

இ) 2008-டிசம்பர் 24

ஈ) 2009-டிசம்பர் 23 [விடை: அ) 2005-டிசம்பர் 23]

12. மழையைக் கணிக்கும் அறிகுறிகளை .................. விஞ்ஞானிகள் வெளியிட்டனர்.

அ) தஞ்சாவூர் வேளாண்மைப் பல்கலைக்கழக

ஆ) புதுவை வேளாண்மைப் பல்கலைக்கழக

இ) குஜராத் - ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழக

ஈ) மதுரை வேளாண்மைப்பல்கலைக்கழக

[விடை: இ) குஜராத் - ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழக]

13. வடக்கிலிருந்து வீசுவது.

அ) வாடை ஆ) தென்றல்

இ) கொண்டல் ஈ) கோடை [விடை: அ) வாடை]

14. நெடுநல்வாடையை இயற்றியவர்.

அ) பரணர் ஆ) மோசிகீரனார்

இ) ஒதலாந்தையார் ஈ) நக்கீரர் [விடை: ஈ) நக்கீரர்]

15. நெடுநல்வாடையில் உள்ள மொத்த அடிகள் ....................

அ) 188 ஆ) 178 இ) 168 ஈ) 198 [விடை: அ) 188]

16. நெடுநல்வாடை .................. இயற்றப்பட்டது.

அ) வெண்பாவால் ஆ) ஆசிரியப்பாவால்

இ) கலிப்பாவால் ஈ) வஞ்சிப்பாவால் [விடை: அ) ஆசிரியப்பாவால்]

17. கூற்று 1 : நெடுநல்வாடையின் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் ஆவான்.

கூற்று 2 : இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும்.

அ) கூற்று 1ம் 2ம் சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு

இ) கூற்று 1ம் 2ம் தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி [விடை: அ) கூற்று 1ம் 2ம் சரி]





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



18. **வளைஇ இலக்கணக்குறிப்பு தருக.**

அ) இன்னிசை அளபெடை ஆ) ஒற்றளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) செய்யுளிசை அளபெடை

[விடை: இ) சொல்லிசை அளபெடை]

19. **ஈறுபோதல், இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் கசதப மிகும் ஆகிய விதிகளின்படி புணர்ந்த சொல்.**

அ) இனநிரை ஆ) புதுப்பெயல்

இ) பைந்தளிர் ஈ) மூதூர் [விடை: ஆ) புதுப்பெயல்]

20. **குளிர்காலம் அல்லது கூதிர்ப்பருவம்.**

அ) ஆடி, ஆவணி ஆ) மார்கழி, தை

இ) ஐப்பசி, கார்த்திகை ஈ) சித்திரை, வைகாசி [விடை: இ) ஐப்பசி, கார்த்திகை]

21. **நெடுநல்வாடை ...................... நூல்களுள் ஒன்று.**

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) பதினெண்கீழ்க்கணக்கு ஈ) சிற்றிலக்கிய [விடை: ஆ) பத்துப்பாட்டு]

22. **கூற்று 1 : அரசனும் போர் வீரர்களும் வெற்றிக்கு அடையாளமாய் வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது காஞ்சி திணையாகும்.**

**கூற்று 2 : போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீட்டை கூதிர்ப்பாசறை என்பர்.**

அ) கூற்று 1ம், 2ம் தவறு ஆ) கூற்று 1ம் 2ம் சரி

இ) கூற்று 1 சரி, 2தவறு ஈ) கூற்று 1 தவறு 2 சரி [விடை: ஈ) கூற்று 1 தவறு 2 சரி]

23. **பொருத்தமற்ற இணையைக் கண்டறி.**

| | | |
|---|---|---|
| அ) | புதுப்பெயல் | - புதுமழை |
| ஆ) | ஆர்கலி | - வெள்ளம் |
| இ) | கவுள் | - கன்னம் |
| ஈ) | மா | - பறவை |

[விடை: ஈ) மா - பறவை]

24. **'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்' என்ற நக்கீரர் பாடலில் பயின்று வந்துள்ள பாவகை.**

அ) இணைக்குறள் ஆசிரியப்பா ஆ) நேரிசை ஆசிரியப்பா

இ) அடிமறிமண்டில ஆசிரியப்பா ஈ) நிலைமண்டில ஆசிரியப்பா

[விடை: ஆ) நேரிசை ஆசிரியப்பா]

25. **புலம்பு என்ற சொல்லின் பொருள்.**

அ) விலங்கு ஆ) கன்னம்

இ) வளைந்த கோல் ஈ) தனிமை [விடை: ஈ) தனிமை]

26. **நெடுநல்வாடையில் 'வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்' என்ற செய்யுளில் அமைந்துள்ள துறை.**

அ) கூதிர்ப்பாசறை ஆ) பொருண்மொழிக்காஞ்சி

இ) செந்துறைப் பாடாண் ஈ) காட்சி வாழ்த்து [விடை: அ) கூதிர்ப்பாசறை]



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





**27. பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| அ) | வடக்கு | 1. | தென்றல் |
| ஆ) | தெற்கு | 2. | கோடை |
| இ) | கிழக்கு | 3. | வாடை |
| ஈ) | மேற்கு | 4. | கொண்டல் |

அ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2 ஆ) அ-4 ஆ-2 இ-3 ஈ-1
இ) அ-2 ஆ-3 இ-2 ஈ-4 ஈ) அ-1 ஆ-4 இ-1 ஈ-3 **[விடை: அ) அ-3 ஆ-1 இ-4 ஈ-2]**

**28. 'மாமேயல் மறப்ப மந்தி கூரப் பறவை படிவன வீழ கறவை.'
மேற்கண்ட நக்கீரர் செய்யுளில் மந்தி என்ற சொல்லின் பொருள்.**

அ) பெண்குரங்கு ஆ) ஆண் குரங்கு
இ) நாய் ஈ) பறவை **[விடை: அ) பெண் குரங்கு]**

**29. இருதிணைக்கும் பொதுவாக வரும் சொற்கள் ................**

அ) குழந்தை, கதிரவன் ஆ) மரம், மனிதர்கள்
இ) சீதா, இராமன் ஈ) நாம், நாங்கள் **[விடை: அ) குழந்தை, கதிரவன்]**

**30. பொருத்தி விடை தேர்க.**

| | | | |
|---|---|---|---|
| அ) | இரண்டு மனிதர்கள் | 1. | உளப்படுத்தாத் தன்மை பன்மை |
| ஆ) | காளை உழுதது | 2. | பதிலிடுபெயர்கள் |
| இ) | அவர், அது | 3. | அஃறிணை ஒருமை பெயர் |
| ஈ) | நாங்கள் இந்தியர்கள் | 4. | உயர்திணை பன்மைப்பெயர் |

அ) 2, 4, 3, 1 ஆ) 4, 3, 2, 1
இ) 3, 2, 4, 1 ஈ) 4, 2, 3, 1 **[விடை: ஆ) 4, 3, 2, 1]**

**31. ஐப்பசி அடைமழை கார்த்திகை கனமழை என்பது.**

அ) அடுக்குத்தொடர் ஆ) சொலவடை
இ) இரட்டைக்கிளவி ஈ) கிளவி **[விடை: ஆ) சொலவடை]**

## சொல்லும் பொருளும்

1. புதுப்பெயல் - புதுமழை
2. ஆர்கலி - வெள்ளம்
3. கொடுங்கோல் - வளைந்த கோல்
4. புலம்பு - தனிமை
5. கண்ணி - தலையில் சூடும் மாலை
6. கவுள் - கன்னம்
7. மா - விலங்கு



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

## இலக்கணக் குறிப்பு

1. வளைஇ - சொல்லிசை அளபெடை
2. பொய்யா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. புதுப்பெயல், கொடுங்கோல் - பண்புத்தொகைகள்

## பகுபத உறுப்பிலக்கணம் காண்க

1. கலங்கி - கலங்கு + இ
   கலங்கு - பகுதி
   இ - வினையெச்ச விகுதி

## புணர்ச்சி விதி

1. **இனநிரை** = இனம் + நிரை
   **விதி** : மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும் - இனநிரை
2. **புதுப்பெயல்** = புதுமை + பெயல்
   **விதி** : ஈறுபோதல் - புது + பெயல்
   **விதி** : இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும். புதுப்பெயல்

## குறுவினா

1. **மழையைப் பற்றிய நம் முன்னோர் மொழிகளை எழுதுக.**

   மாமழை போற்றுதும்
   நீரின்றி அமையாது உலகு
   மாரியல்லது காரியமில்லை.

   என்பவை மழையைப் பற்றிய நம் முன்னோர் மொழிகளாகும்.

2. **அண்மைக்காலங்களில் பெரும் வெள்ளப்பெருக்கை சந்தித்த மாநிலங்களின் பெயர்களை குறிப்பிடுக.**

   **அண்மைக்காலங்களில் பெரும் வெள்ளப்பெருக்கை சந்தித்த மாநிலங்கள் :**
   தமிழ்நாடு, ஜம்மு-காஷ்மீர், உத்தரகாண்ட், கேரளா, பீகார் முதலானவையாகும்.

3. **அண்மைக்காலங்களில் நம் நிலத்தையும், வாழ்வின் அடிப்படைகளையும் பாதித்த பெரும்புயல்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

   நிஷா, தாதே, வர்தா, ஒக்கி, கஜா முதலானவை அண்மைக் காலங்களில் நம் நிலத்தையும், வாழ்வின் அடிப்படைகளையும் பாதித்த பெரும்புயல்களாகும்.

4. **இயற்கை சமநிலை இழக்கும்போது ஏற்படும் மாற்றங்கள் யாவை?**

   (i) இயற்கை சமநிலை இழக்கும்போது இயல்பான பருவ நிலையில் மாற்றம் ஏற்படுகிறது.

   (ii) பருவநிலை மாற்றத்தினால் புயல், பெருமழை, பெருவெள்ளம், புவி வெப்பமாதல் உள்ளிட்ட மாறுபட்ட நிகழ்வுகள் நடக்கின்றன.



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**5. ஆற்றங்கரைப் படிவு என்றால் என்ன?**

ஆற்றில் வெள்ளம் கரைபுரண்டு வரும் காலங்களில் அடித்துவரப்படும் பொருள்கள் ஆற்றின் ஓரங்களில் படிந்துவிடும். இது ஆற்றங்கரைப்படிவு எனப்படும்.

**6. புவி வெப்பமடைவது இயற்கையாகவே நேர்கிறதா? மனிதர்களது செயல்பாடுகளால் நேர்கிறதா? ஆய்வு செய்க.**

(i) புவி வெப்பமடைவது மனிதர்களின் செயல்பாடுகளால் நிகழ்கிறது.

(ii) மனிதன் தன் பேராசை காரணமாக இயற்கை வளங்களைக் கடுமையாகச் சேதப்படுத்துகின்றான்.

(iii) இங்கிலாந்தைச் சேர்ந்த அறிவியல் எழுத்தாளர் டேவிட் கிங் புவி வெப்பமடைதல் மனிதன் உருவாக்கிக் கொண்ட சிக்கலே என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார்.

**7. எதனைப் பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறார்கள்?**

கார்பன் டை ஆக்ஸைடு, மீத்தேன், நைட்ரஸ் ஆக்சைடு, ஓசோன், நீர்வாயு போன்றவற்றை பசுமைக்குடில் வாயுக்கள் என்கிறார்கள்.

**8. பசுமைக்குடில் வாயுக்களால் ஏற்படும் விளைவுகள் யாவை?**

(i) புவி வெப்பமடையத் தொடங்கும்.

(ii) காலநிலை மாறுதல்கள் ஏற்பட்டுப் புவியின் இயக்கம் குறையும்.

**9. பசுமைக்குடில் வாயுக்களுக்கு மாற்று ஆற்றல்களாக விளங்கக் கூடியவை எவை? அல்லது கார்பன் அற்ற ஆற்றல்கள் எவை?**

சூரிய ஆற்றல்,காற்று ஆற்றல், ஹைட்ரஜன் ஆற்றல், தாவர ஆற்றல் போன்றவை பசுமைக்குடில் வாயுக்களுக்கு மாற்று ஆற்றல்களாக (கார்பன் அற்ற ஆற்றல்களாக) விளங்குகின்றன.

**10. குளிரின் மிகுதியால் கோவலர்கள் செய்த செயல் என்ன?**

குளிரின் மிகுதியால் கோவலர்கள் பலரும் சேர்ந்து சுள்ளிகளைக் கொண்டு நெருப்பு மூட்டி அனலில் கைகளைக் காட்டித் தங்கள் கன்னங்களில் வைத்துக்கொண்டனர்.

**11. கூதிர்க்குளிரால் விலங்குகள் அடைந்த துன்பங்கள் யாவை?**

(i) விலங்குகள் குளிர் மிகுதியால் மேய்ச்சலை மறந்தன. குரங்குகள் குளிரால் நடுங்கின. மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.

(ii) பசுக்கள் பாலுண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன. இவை கூதிர்க்குளிரால் விலங்குகள் அடைந்த துன்பங்கள் ஆகும்.

**12. புதிய மழை பொழிந்ததின் காரணமாய் கோவலர்கள் செய்த செயல் யாது?**

உலகம் குளிருமாறு புதிய மழைப் பொழிந்ததின் காரணமாய்க் கோவலர் (ஆயர்) எருமை, பசு, ஆடு, ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.

**13. நெடுநல்வாடை பற்றி குறிப்பு வரைக.**

(i) நெடுமை + நன்மை + வாடை = நெடுநல்வாடை. இது பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாகும். இந்நூல் 188 அடிகளைக் கொண்டது. ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது.

(ii) பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்டு, மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர் இயற்றிய நூல் இந்நூல். அரண்மனை அமைப்பைப் பற்றி கூறும் நூல் இதுவாகும்.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**14. நெடுநல்வாடை பெயர்க்காரணம் தருக.**

(i) நெடுநல்வாடை இருவகையில் பொருள் சிறந்து விளங்குகிறது. நெடுநல்வாடை – நெடுவாடை, நல்வாடை.

(ii) **நெடுவாடை :** தலைவனைப் பிரிந்த தலைவிக்குத் துன்பமிகுதியால் நெடுவாடையாக இருந்தது.

(iii) **நல்வாடை :** போர்ப் பாசறையிலிருக்கும் தலைவனுக்கு வெற்றி பெற ஏதுவான நல்வாடையாக இருந்தது.தலைவி, தலைவன் இருவர்பாலும் செயல்பட்ட வாடையின் இரு வேறுபட்ட தன்மைகளையும் ஒழுங்குபடுத்தி நெடுநல்வாடை என இந்நூல் பெயர்பெற்றது.

**15. வாகைத்திணை, கூதிர்ப்பாசறை விளக்குக.**

(i) **வாகைத்திணை :** வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப்பூவைச் சூடி வெற்றியைக் கொண்டாடுவது வாகைத்திணையாகும்.

(ii) **கூதிர்ப்பாசறை :** போர்மேற் சென்ற அரசன்குளிர்காலத்தில் தங்கும் படைவீடு கூதிர்ப்பாசறை.

**16. தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் எவற்றை உணர்த்துகின்றன?**

தமிழ்மொழியில் பெயர்ச்சொற்களும், வினைச்சொற்களும் திணை, பால், எண், இடம் ஆகியவற்றை உணர்த்துகின்றன.

**17. எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருத்தலை எவ்வாறு அறியலாம்?**

(i) முருகன் நூலகம் சென்றான். இத்தொடரில் முருகன் என்னும் எழுவாய் அதன் திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்துகிறது.

(ii) இந்த எழுவாய் தான் பெற வேண்டிய வினைமுற்றை உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கை எனப் பொருத்தமுடன் அமையுமாறு வேண்டி நிற்கிறது. இதன் மூலம் எழுவாய்க்கும் பயனிலைக்கும் நெருங்கிய இயைபு இருத்தலை அறியலாம்.

**18. பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் எத்தனை வகையாகப் பிரிப்பர்? அவை யாவை?**

பெயர்ச்சொற்களைத் திணை அடிப்படையில் இரண்டு வகையாகப் பிரிப்பர். அவை உயர்திணைப் பெயர், அஃறிணைப்பெயர் என்பனவாகும்.

**19. தொல்காப்பியர் கூறும் உயர்திணை, அஃறிணையை நூற்பா மூலம் விளக்குக.**

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே. (தொல்காப்பியம் சொல் –1)

எனவரும் தொல்காப்பிய நூற்பா மக்கள் என்று சுட்டப்படுவோர் உயர்திணை. அவரல்லாத பிற அஃறிணை என்று கூறுகிறது.

**20. தமிழில் யார்? எது? போன்ற வினாச்சொற்களைப் பயனிலையாக அமைத்து திணை வேறுபாடு எவ்வாறு அறியப்படுகிறது?**

(i) அங்கே நடப்பது யார்?

(ii) அங்கே நடப்பது எது?

என்னும் தொடர்கள் பொருட்குறிப்பின் அடிப்படையில் யார் என்ற பயனிலை உயர்திணையையும் எது என்ற பயனிலை அஃறிணையும் உணர்த்துகின்றன.

**21. படர்க்கை இடத்தில் வரும் பயனிலை விகுதிகள் எவை?**

ஆன், ஆள், ஆர், அது, அன் முதலியவை படர்க்கை இடத்தில் வரும் பயனிலை விகுதிகள் ஆகும்.



www.surabooks.com



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**22. ஒவ்வொரு என்ற சொல் ஒருமையைக் குறிக்கும் சான்று தந்து விளக்குக.**

(i) ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் உள்ளது.

(ii) ஒவ்வொரு பள்ளியும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு என்ற சொல் ஒருமையை மட்டுமே காட்டுகிறது.

**23. இடம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

இடம் மூன்று வகைப்படும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்பனவாகும்.

**24. தன்மைப்பெயர் என்றால் என்ன?**

பேசுபவனையும் அவனைச் சார்ந்தவர்களையும் குறிக்கும் பெயர் தன்மைப்பெயர் எனப்படும்.

**எ.கா :** நான், யான் – தன்மை ஒருமை

நாம், நாங்கள், யாம், யாங்கள் – தன்மைப் பன்மை

**25. தன்மைப் பன்மை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

(i) தன்மைப் பன்மை இரண்டு வகைப்படும். அவை

(ii) உளப்பாட்டுத் தன்மைப்பன்மை, உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்பனவாகும்.

**26. உளப்பாட்டுத் தன்மை என்றால் என்ன?**

(i) பேசுபவர் (தன்மை) முன்னிலை யாரையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டு பேசுவது உளப்பாட்டுத் தன்மைப் பன்மை எனப்படும்.

(ii) **எ.கா :** நாம் முயற்சி செய்வோம்.

நாம் இந்தியர்கள்

இத்தொடரில் நாம் என்பது தன்மை முன்னிலையில் உள்ள அனைவரையும் குறிக்கும்.

**27. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை என்றால் என்ன? சான்று தருக.**

பேசுபவர் முன்னிலையாரைத் தவிர்த்துத் தன்மைப் பன்மையில் பேசுவது உளப்படுத்தாத தன்மைப் பன்மை எனப்படும்.

**சான்று :**

நாங்கள் முயற்சி செய்வோம்.

நாங்கள் தமிழர்கள்.

**28. பதிலிடுபெயர்கள் அல்லது மாற்றுப்பெயர்கள் பற்றி எழுதுக.**

(i) ஒரு பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக மாற்றாகப் பயன்படும் பெயர் பதிலிடுபெயர் (அ) மாற்றுப்பெயர் எனப்படும்.

(ii) **எ.கா :** கலையரசன் இங்கு வந்தான். பிறகு, அவன் தன் வீட்டிற்குச் சென்றான்.

இதில் அவன் என்பது கலையரசனுக்கு மாற்றாக வந்தது.

நாய் வேகமாக ஓடிவந்தது. அது தன் குட்டிக்குப் பால் கொடுத்தது.

அது–மாற்றுப்பெயர்.

## சிறுவினா

**1. ஐக்கிய நாடுகள் அவை புவி வெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த எத்தகைய நடவடிக்கையை எடுத்து வருகிறது?**

(i) ஐக்கிய நாடுகள் அவை 1992 ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோவில் கால நிலைமாற்றம் பற்றிய பணித்திட்டப் பேரவையை உருவாக்கியது.

(ii) முதலில் 50 நாடுகளும் பின்னர் 193 நாடுகளும் உறுப்பினர்களாக இப்பேரவையில் சேர்ந்தன.





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

(iii) ஒவ்வோர் ஆண்டும் பசுமைக்குடில் வாயுக்களைக் கட்டுப்படுத்துவது குறித்து உரையாடல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(iv) புவி வெப்பமடைய காரணமாக உள்ள பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கண்டறிந்து அதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வருகின்றது.

**2. பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளைப் பட்டியலிடுக.**

(i) சீனா

(ii) அமெரிக்கா

(iv) ரஷ்யா

(v) ஜப்பான்

(v) இந்தியா ஆகியவை பசுமைக்குடில் வாயுக்களை வெளியேற்றும் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ள நாடுகளில் முன்னிலை பட்டியலில் உள்ளன.

**3. வங்கக்கடலிலும், அரபிக்கடலிலும் உருவாகும் புயல்களுக்குப் பெயர் வைக்கும் நாடுகள் யாவை? பட்டியலிடுக.**

(i) இந்தியா

(ii) பாகிஸ்தான்

(iii) இலங்கை

(iv) வங்கதேசம்

(v) மாலத்தீவு

(vi) மியான்மர்

(vii) ஓமன்

(viii) தாய்லாந்து ஆகிய எட்டு நாடுகள் ஒவ்வொன்றும் எட்டுப் பெயர்களைப் பரிந்துரை செய்திருக்கின்றன. அந்தப் பட்டியலில் உள்ள 64 பெயர்களின் வரிசைப்படிதான் ஒவ்வொரு புயலுக்கும் பெயர் வைக்கப்படுகிறது.

**4. வெள்ளப்பெருக்கு ஏற்படுவதின் காரணங்களை எழுதுக.**

(i) நாம் நீர்நிலைகளை அழித்துக் குடியிருப்புகள், தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் போன்றவற்றை உருவாக்கிக் கொள்கிறோம்.

(ii) நெகிழி மற்றும் திடக்கழிவுகளைக் கொட்டி நீர்வழிப்பாதைகளைக் குறுக்கி வெள்ளச் சமவெளிகள் இல்லாமல் செய்துவிடுகிறோம்.

(iii) இதன் விளைவாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உயிர், உடைமை, இழப்புகள் ஏற்படுகின்றன.

**5. ஆற்றங்கரைப்படிவால் அல்லது அடுக்குப்படிவால் ஏற்படும் நன்மைகள் யாவை?**

(i) ஆற்றங்கரைப் படிவு வெள்ளப் பெருக்குக் காலங்களில் நீரை உறிஞ்சுவதால் வெள்ளப்பெருக்கு ஏற்படுவது குறையும்.

(ii) நீர் மாசடைவதைத் தடுக்கும். மண் அரிப்பைத் தடுக்கும்.

(iii) வறட்சிக் காலங்களில் நீர்மட்டம் குறைந்துவிடாமல் பாதுகாக்கும்.

(iv) உபரிநீர்க் கால்வாய்களும் வெள்ளக்காலங்களில் உதவியாக இருக்கும்.



www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



**6. பேரிடர்களிலிருந்து தற்காத்துக் கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் யாவை?**

**பேரிடர்களிலிருந்து தற்காத்துக் கொள்ள மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

(i) பேரிடர்க் காலங்களில் தாங்கக்கூடியவையாகப் புதிய கட்டுமானங்களை அமைக்க வேண்டும்.

(ii) நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கப்பட்டு அப்பாதைகளைத் தொடர்ந்து பராமரிக்க வேண்டும்.

(iii) சமூக காடுகள் வளர்ப்புத் திட்டங்களைச் சமூக இயக்கமாக வளர்த்தெடுக்க வேண்டும். கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.

**7. பேரிடர் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் யாவை?**

(i) பதற்றமடைதலைத் தவிர்க்க வேண்டும். வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் புயல், மழை தொடர்பான தகவல்களின் அடிப்படையில் செயல்பட வேண்டும்.

(ii) வதந்திகளை நம்பவோ, பரப்பவோ கூடாது. அரசு, தீயணைப்புத்துறை, காவல்துறை தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் மீட்பு, பாதுகாப்பான முதலான பணிகளில் ஈடுபட வேண்டும்.

(iii) பாதுகாப்பு மையங்களையும், மருத்துவக் குழுக்களையும் அணியமாக வைத்திருக்க வேண்டும்.

**8. மழையைக் கணிக்கும் அறிகுறிகள் யாவை?**

(i) கார்மேகங்கள் சூரிய உதயத்திற்கு 15,20 நிமிடங்களுக்கு முன்னதாகக் கிழக்கு வானத்தில் தோன்றும். செம்மை நிற மேகங்கள் திடீர் புயல், காற்றின் திசை, இடி, மின்னல், பலமான காற்று வானவில் போன்றவை நிகழும்.

(ii) முட்டைகளைச் சுமந்திருக்கும் எறும்புகள், பறக்கும் பருந்து, சூரியனைச் சுற்றி ஒளிவட்டம் போன்ற நிகழ்வுகள் ஏற்படும். வெப்பமும் ஈரப்பதமுள்ள வானிலையும், தூசுப்பனிமூட்டமும் ஏற்படும்.

(iii) இவையே மழையைக் கணிக்கும் அறிகுறிகளாக குஜராத்தில் உள்ள ஆனந்த் வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

**9. இயற்கைச் சமநிலை பற்றி எழுதுக.**

(i) மழை பெய்வதால் எல்லாவற்றிலும் நீர் ததும்புகிறது. செடி கொடிகள் வளர்கின்றன. காய்கனிகள் காய்க்கின்றன. நெல், தானியங்கள் விளைகின்றன.

(ii) மனிதன் காய்கறிகளையும் விலங்குகளையும் உண்கிறான். ஆடு, மாடு போன்றவை செடிகொடிகளை உண்கின்றன. புலி, சிங்கம் போன்றவை ஆடு, மாடு, மான்களை உண்கின்றன.

(iii) தாவரங்களை உண்ணும் பிராணிகள் 'தாவர உண்ணிகள்'. விலங்குகளை உண்ணும் 'ஊன் உண்ணிகள்'. ஊன் உண்ணிகள் தாவர உண்ணிகளைப் பிடித்து உண்கின்றன. இந்த இயற்கையின் சுழற்சியே இயற்கைச் சமநிலை.

☆ ☆ ☆





orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000
www.surabooks.com

This is only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores

# இயல் 3

பண்பாடு

# சுற்றத்தார் கண்ணே உள

## பாடப் பகுதி

| | |
|---|---|
| உரைநடை உலகம் | தமிழர் குடும்ப முறை – பக்தவத்சல பாரதி |
| கவிதைப் பேழை (செய்யுள்) | விருந்தினர் இல்லம் – ஜலாலுத்தீன் ரூமி<br>கம்பராமாயணம் – கம்பர் |
| விரிவானம் (துணைப்பாடம்) | உரிமைத் தாகம் – பூமணி |
| இனிக்கும் இலக்கணம் (இலக்கணம்) | பொருள் மயக்கம் |
| வாழ்வியல் | திருக்குறள் – திருவள்ளுவர் |


பழங்குடியினரின் சமூக வாழ்க்கை ஓவியம், நீலகிரி.

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

1. **சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை**

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும், சுங்கமும்

[விடை: ஆ) திருமணமும் குடும்பமும்]

2. **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க.**

அ) உரிமைத் தாகம் – 1) பாரசீகக் கவிஞர்
ஆ) அஞ்ஞாடி – 2) பூமணி
இ) ஜாலாலுத்தீன் ரூமி – 3) பக்தவச்சல பாரதி
ஈ) தமிழர் குடும்ப முறை – 4) சாகித்திய அகாதெமி

அ) 2, 4, 3, 1 ஆ) 3, 4, 1, 2
இ) 2, 4, 1, 3 ஈ) 2, 3, 4, 1

[விடை: இ) 2,4,1,3]



www.surabooks.com
orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


123. **Love is God.**

அன்பே கடவுள்.

124. **(There's) many a slip between the cup and the lip.**

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

125. **Necessity knows no law.**

ஆபத்துக்குப் பாவமில்லை.

126. **No rains (pains), no gains.**

துன்பமின்றி இன்பமில்லை.

127. **Never say die.**

முயற்சி திருவினையாக்கும்.

128. **No smoke without fire.**

நெருப்பில்லாமல் புகை இல்லை.

129. **One flower makes no garland.**

தனி மரம் தோப்பு ஆகாது.

130. **Penny-wise/ pound foolish.**

கடுகு போன இடம் ஆராய்வர், பூசணி போன இடம் தெரியாது.

131. **Penury pinches all.**

பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்.

132. **Procrastination is the thief of time.**

தாமதமே தாழ்வுக்கு ஏதுவாகும்.

133. **Sweet are the uses of adversity.**

இன்னலிலும் இன்பம் உண்டு.

134. **Spare the rod and spoil the child.**

அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவமாட்டார். அடியாத மாடு படியாது.

135. **Sadness and gladness succeed each other.**

வறுமை ஒரு காலம், வளமை ஒரு காலம்.



www.surabooks.com


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores





# மொழியாக்கம்

1. **Congratulation on your success in the examination**

   நீ தேர்வில் வெற்றி பெற்றமைக்கு எனது பாராட்டுக்கள்.

2. **But for your timely help I would not have succeeded.**

   சரியான நேரத்தில் உன்னுடைய உதவியின்றி என்னால் வெற்றி பெற்றிருக்க முடியாது.

3. **Behave courteously**

   மரியாதையுடன் நடந்துகொள்.

4. **Every one should be a law, abaidene citizen.**

   ஒவ்வொரு குடிமகனும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவனாய் இருக்க வேண்டும்.

5. **Don't talk too much, Hold your tongue.**

   அதிகம் பேசாதே நாவடக்கம் கொள்.

6. **Writing essay is an art.**

   கட்டுரை எழுதுவது ஒரு கலை.

7. **I anticipate your favourable reply.**

   உன் சாதகமான பதிலை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

8. **I cant make out the meaning of this word.**

   என்னால் இச்சொல்லின் பொருளை அறிய இயலவில்லை.

9. **My father has disposed of his cow Rs.1000/-.**

   என் தந்தை, தன் பசுவை ஓராயிரம் ரூபாய்க்கு விற்றுள்ளார்.

10. **Nelson Mandela is the champion of the liberation movement south Africa.**

    நெல்சன் மண்டேலா அவர்கள் தென்னாப்பிரிக்கா விடுதலை இயக்கத்தின் காவலர் ஆவார்.

11. **Trespassers will be prosecuted.**

    அத்துமீறி நுழைபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

12. **The thief tried to get at.**

    திருடன் என்னைத் தாக்க முயன்றான்.

13. **Air is a mixture of several gases.**

    பல வாயுக்களின் கலவையே காற்று.

14. **This journey is going to be pleasant me.**

    இந்தப் பயணம் மிகவும் இனிதாக அமையப் போகிறது.

15. **Good Book must be read.**

    நல்ல புத்தகங்களைப் கட்டாயம் படிக்க வேண்டும்.



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

www.surabooks.com

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores


16. **Villages are the back bone of India.**

இந்தியாவின் முதுகெலும்பு கிராமங்களேயாகும்.

17. **Congratulation on the distinction conferred on you.**

நீ பெற்ற வெற்றிக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

18. **The people in Japan are quiet, industrious and intelligent.**

ஜப்பானிய மக்கள் அமைதி, சுறுசுறுப்பு மற்றும் அறிவு மிக்கவர்கள்.

19. **Television brings the world into your own home in sight and sound.**

தொலைக்காட்சி உலகத்தை உன்னுடைய வீட்டிற்கு வந்து ஒளியும் ஒலியுமாகத் தருகிறது.

20. **The sudden wind blew out the candle light**

திடீரென்று வீசிய காற்று மெழுகுவர்த்தியை அணைத்துவிட்டது.

21. **Elango's marriage comes off next sunday.**

அடுத்த ஞாயிற்றுக்கிழமை இளங்கோவின் திருமணம் நடைபெறும்.

22. **The caption in the newspaper was misleading.**

செய்தித்தாளின் தலைப்பு, தவறான வழியில் இட்டுச் சென்றது.

23. **The new Headmaster took over last week.**

புதிய தலைமையாசிரியர் கடந்தவாரம் பொறுப்பேற்றார்.

24. **I backed up my friends case.**

என் நண்பனின் வழக்குக்கு நான் ஆதரவு தந்தேன்.

25. **He promised to go into the matter.**

அவர் அந்த விஷயத்தைப் பரிசீலிப்பதாய் உறுதியளித்தார்.

26. **Before he could see his son, that old man breathed his last.**

முதியவர் தம் மகனைப் பார்ப்பதற்கு முன்னர் இறந்தார்.

27. **The Government announced some schemes.**

அரசு சில திட்டங்களை அறிவித்துள்ளது.

28. **Education should develop and promote good values.**

கல்வியானது நற்பண்புகளை வளர்ப்பதாகவும் மேம்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

29. **Students want to join computer courses.**

மாணவர்கள் கணிப்பொறி வகுப்பில் சேர விரும்புகிறார்கள்.

☆ ☆ ☆



www.surabooks.com


orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000

This is Only for Sample www.Padasalai.Net www.TrbTnpsc.com
for Full Book Order online and Available at all Leading Bookstores



# 12ஆம் வகுப்பு - பொது தேர்வு அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு

அரசாணை (2t) எண். 13 (20-02-2018)

மொத்த மதிப்பெண்கள் - 100

எழுத்துதேர்வு 90 மதிப்பெண்கள்

அகமதிப்பீடு 10 மதிப்பெண்கள்

## அகமதிப்பீட்டிற்கான மதிப்பெண் ஒதுக்கீடு (அதிகபட்சம் 10 மதிப்பெண்கள்)

| மாணவர்கள் வருகைப் பதிவு அதிகபட்சம் 2 மதிப்பெண்கள் | உள்நிலைத் தேர்வுகள் அதிகபட்சம் 4 மதிப்பெண்கள் |
|---|---|
| 80 சதவீதத்திற்கு மேல் வருகை - 2 மதிப்பெண்கள்<br>75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரை - 1 மதிப்பெண் | சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் - 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும். |
| **ஒப்படைவு/செயல்திட்டம்/களப்பயணம் அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்** | **கல்வி இணைச் செயல்பாடுகள் அதிகபட்சம் 2 மதிப்பெண்கள்** |
| ஒப்படைவு/ செயல்திட்டம்/களப்பயணம் இவை மூன்றில் ஏதேனும் ஒன்று - உரிய பதிவேடுகள் பராமரிக்கப்பட வேண்டும். | * கல்வி இணைச் செயல்பாடுகளுள் ஏதேனும் மூன்று |

## * கல்வி இணைச் செயல்பாடுகள்

1. மரம் வளர்த்தல்
2. இலக்கிய மன்றம்
3. கணித மன்றம்
4. இயற்பியல் மன்றம்
5. வேதியியல் மன்றம்
6. உயிரியல் மன்றம்
7. வணிகவியல் மன்றம்
8. பொருளியல் மன்றம்
9. வரலாற்று மன்றம்
10. அறிவியல் மன்றம் - அறிவியல் கண்காட்சிகள், கருத்தரங்குகள் உள்ளிட்ட செயல்பாடுகள்
11. தேசிய பசுமைப்படை
12. சாரண சாரணியர் இயக்கம்
13. நாட்டு நலப் பணித் திட்டம்
14. தேசிய மாணவர் படை
15. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்
16. சுற்றுச்சூழல் மன்றம்
17. நுண்கலை மன்றம்
18. முதலுதவி மன்றம்
19. உடல் நலன் மற்றும் சுகாதார மன்றம்
20. நுகர்வோர் மன்றம்
21. கலாச்சார மன்றம்
22. நாடக மன்றம்
23. தொன்மை பாதுகாப்பு மன்றம்
24. தகவல் தொழில்நுட்ப மன்றம்
25. நூலக மன்றம்
26. இதழியல் மன்றம்
27. இசை மன்றம்
28. கவின் கலை மன்றம்
29. செஞ்சுருள் சங்கம்
30. வினாடி வினா மன்றம்
31. சாலைப் பாதுகாப்புப் படை
32. விளையாட்டுச் செயல்பாடுகள்
33. தொழிற்கல்வி மன்றம்

## அகமதிப்பீடு மதிப்பெண்கள்

| வருகைப் பதிவு | உள்நிலைத் தேர்வுகள் | | | | ஒப்படைவு/ செயல்திட்டம்/ களப்பயணம் | கல்வி இணைச் செயல்பாடுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | தேர்வு -1 | தேர்வு -2 | தேர்வு -3 | தேர்வு -4 | | | |
| .................... | சிறந்த ஏதேனும் மூன்று தேர்வுகளின் சராசரி மதிப்பெண் - 4 மதிப்பெண்களுக்குக் கணக்கிடப்பட்டு வழங்கப்பட வேண்டும். | | | ................ | ................ | ................ | ................ |



orders@surabooks.com PH: 9600175757 / 8124201000 / 8124301000